120

# புதுமைத் தமிழ் வாசகம்

முதற் படிவம்

சிறப்புப் பகுதி

ஆக்கியோன் :
வித்வான் V. மாணிக்கம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 JUL 1954
MADRAS
120
3-54

M & G Process Trichy

T.G. GOPAUL PILLAI
PUBLISHERS
...PPAKULAM | 2/27 BROADWAY
...IRAPALLI | G.T. MADRAS.

TB
031,6(63)
N54
173741

# புதுமைத் தமிழ் வாசகம்

## முதற் படிவம்—சிறப்புப் பகுதி

OFFICE OF [illegible] REGISTRAR OF BOOKS
12 JUL 1954
MADRAS

ஆக்கியோன் :
வித்வான் V. மாணிக்கம்

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி | 2/27, பிராட்வே ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1954 [விலை ரூ. 0–10–0

முதற் பதிப்பு—அக்டோபர், 1953
இரண்டாம் பதிப்பு—மே, 1954

-600 008.
123741

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 19-5-1954,
Supplement to Part-I-B, Page 118]

TB.
681,6

Kabeer Printing Works, Madras (2539)

# முன்னுரை

இவ்வாசக வரிசை துரைத்தனத்தாரால் 1952-ஆம் ஆண்டு புதியதாகத் திருத்தி அமைக்கப்பட்ட பாடத் திட்டத்திற்கிணங்க எழுதப்பட்டது. இவ்வரிசையில் இப்புத்தகம் முதற் படிவம் சிறப்புப் பகுதிக்கு உரியதாகும்.

இதனுள் அமைக்கப்பட்டுள்ள பாடங்கள் வகுப்புக்கு ஏற்றவையாய் உள்ளன. வகுப்பின் மொழி நடை தகுதிக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளது. பாடங்களில் கண்ட செய்திகள் மாணவர்க்கு உற்சாகம் தருமாறு வரையப்பட்டுள்ளன. எல்லா வகையிலும் இப் புத்தகம் இவ்வகுப்பு மாணவர்க்குப் பொருந்தியதாயிருக்குமென்று நம்புகிறேன்.

கல்வித்துறை சார்ந்தோர் இதனை ஆதரித்து என்னை ஊக்குவார்களென்று எண்ணுகின்றேன்.

ஆக்கியோன்

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|

## உரைநடைப் பாடங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவப்பிரகாசர் | ... | 1 |
| 2. | ஏறு தழுவுதல் | ... | 8 |
| 3. | புலவர் அறவுரை | ... | 15 |
| 4. | நட்பிற்கிலக்கணமானவர் | ... | 22 |
| 5. | தேவந்தி | ... | 29 |
| 6. | சட்டமும் நியாயமும் | ... | 35 |
| 7. | தாயுமானவர் | ... | 43 |
| 8. | பூம்புகார் | ... | 49 |

## செய்யுட் பாடங்கள்

I வாழ்த்து

| | | | |
|---|---|---|---|
| 1. | கடவுள் வாழ்த்து | ... | 55 |
| 2. | தமிழ் வாழ்த்து | ... | 55 |

II நீதி

| | | | |
|---|---|---|---|
| 1. | நன்னெறி | ... | 56 |
| 2. | நீதிநெறி விளக்கம் | ... | 56 |
| 3. | நாலடியார் | ... | 57 |
| 4. | பழமொழி | ... | 27 |

III கதை

| | | | |
|---|---|---|---|
| | பஞ்சதந்திரம் | ... | 59 |

IV பிறவகை ... 62

# புதுமைத் தமிழ் வாசகம்

## முதற் படிவம்—சிறப்புப் பகுதி

### 1. சிவப்பிரகாசர்

நமது தமிழ் நாட்டில் சமீப காலத்தில் சிவ பக்தியிலும் தமிழ்க் கல்வியிலும் சிறந்த சான்றோர்கள் பலர் இருந்தார்கள். அவருள் சிவப்பிரகாசர் என்பவர் ஒருவர். அவர் தூய்மையுள்ளம் படைத்த துறவி; குரு பக்தியில் மேம்பட்டவர்; கல்விக்கடல். அவரது வாழ்க்கை மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. அவரது வரலாற்றை ஈண்டுச் சுருக்கிக் கூறுவோம்.

சிவப்பிரகாசரது தந்தையார் பெயர் குமாரசுவாமி தேசிகர். அவர் வேளாளருக்குத் தீக்ஷா குருவாய்க் காஞ்சீபுரத்தில் விளங்கி யிருந்தார். அவர் சிவபக்தியில் சிறந்தவர். அவர் ஒரு கால் தலயாத்திரையாகப் புறப்பட்டுத் திருவண்ணுமலைக்குச் சென்றுர். வழியில் ஒரு சோலையில் தங்க நேர்ந்தது. அங்கே மறதியாகத் தமது பூசைப்பெட்டியை வைத்து விட்டுத் திருவண்ணுமலைக்கு வந்து விட்டார். பிறகு அச் செய்தி தெரியவந்த போது அவர் "என்றும் பிரியாத இறைவனை இன்று பிரிய நேர்ந்ததே!" என்று மிகவும் வருந்தினர்.

அன்றிரவில் சிவபெருமான் அவரது கனவில் ஒரு சிவனடியார் உருவில் தோன்றி "நீர் உமது

அங்கத்திலேயே சிவலிங்கத்தை வைக்காமல் வேருக வைத்ததனுல் அன்ருே இத்துன்பம் நேர்ந்தது ! இனி உமது அங்கத்திலேயே அவ்விறைவனை வைத்துக் கொள்வீராக!'' என்று கூறி மறைந்தனர். மறு நாள் அவரால் ஏவப் பெற்ற ஆட்கள் அச்சோலையை அடைந்து பூசைப் பெட்டியைக் கொணர்ந்தனர். அப்பால் இறைவன் கனவில் கூறியபடியே **லிங்க தாரணம்** செய்து கொண்டார்.

சிவப்பிரகாசர் ஏறக்குறைய முந்நூறு ஆண்டு கட்கு முன் இத் தமிழ் நாட்டில் அவதரித்தார். அவருக்கு **வேலாயுதம், கருணைப்பிரகாசம்** என இரு சகோதரரும் **ஞானம்பிகை** என ஓர் சகோதரி யும் உண்டு. அவர் இளமைப் பருவத்திலேயே தந்தையை இழந்தார். பிறகு தம் சகோதரரை அழைத்துக் கொண்டு திருவண்ணுமலையை அடைந்து அங்கு வசிப்பாராயினுர்.

திருவண்ணுமலையில் கோயிலுக்குத் தென்பால் இருந்ததொரு மடத்தில் குருதேவர் என்ற ஒரு பெரியார் இருந்தார். அவரிடம் சிவப்பிரகாசரும் அவரது சகோதரரும் கல்வி கற்று வந்தனர். சிறந்த நுண்ணறிவு படைத்த சிவப்பிரகாசர் விரைவில் பல நூல்களைக் கற்றுத் தமிழில் கவிபாடும் வன்மையும் அடைந்தார். இங்ஙனமிருக்கையில் ஒரு நாள் திருவண்ணுமலையை வலமாகச் சுற்றி வரலாஞர். அப்போது தீடீரென அவருக்கு அம்மலையைக் குறித்து ஓர் பிரபந்தம் இயற்ற வேண்டும் என்னும் எண்ணம் உண்டாயிற்று. உடனே **சோணசைல மாலை** என்னும் நூலை விரைந்து பாடி முடித்தார். அந்நூல் மிக்க இனிமையானது. நுண்ணிய பல கருத்துக்களைக் கொண்டது.

நிற்க, சிவப்பிரகாசர் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைச் சிறந்த ஓர் ஆசிரியரிடம் முறையாகக் கற்க வேண்டும் எனத் தீர்மானித்தார். அதில் வல்லவர்கள் யார் என ஆராயுங்கால் திருநெல்வேலியில் உள்ள சிந்துபூந்துறையில் அக்காலத்தில் இருந்த **வெள்ளியம்பலத் தம்பிரான்** என்பவர் அவ்வகையில் சிறந்தவர் எனக் கேள்வியுற்றார். உடனே அங்குச் செல்லப் புறப்பட்டார்.

வழியில் அவர் **துறைமங்கலம்** என்னும் ஊரை யடைந்த போது அவருக்கு அக் கிராமாதிகாரியாகிய **அண்ணாமலை** ரெட்டியார் என்பவரது நட்புக் கிடைத்தது. ரெட்டியார் சிவப்பிரகாசரைத் தமது குருவாகக் கொண்டு அவருக்கு அவ்வூரில் ஓர் மடம் கட்டிக் கொடுத்து அங்கேயே தங்கியிருக்குமாறு வேண்டினார். சிவப்பிரகாசர் தாம் திருநெல்வேலிக்குச் செல்ல நினைத்த கருத்தை அவருக் கறிவித்துத் திரும்புகாலில் அங்குத் தங்குவதாகக் கூறி அவ்விடத்தினின்றும் புறப்பட்டார்.

பிறகு சில நாட்களில் சிந்துபூந்துறையை அடைந்து வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இலக்கண நூல்களைக் கற்பாராயினர். அவரது சகோதரரும் அவருடன் சேர்ந்து இலக்கணங்களைக் கற்றனர். கல்வி கற்றுத் தேர்ந்த பின் அவர் குரு காணிக்கையாகத் தாம் கொணர்ந்திருந்த பொருளைக் கொடுக்கப் போனார். அப்போது தம்பிரான் தமக்குப் பொருள் வேண்டாமென்றும் திருச்செந்தூரில் தமிழ்ப் புலவரைப் பரிகசித்துத் திரியும் புலவர் ஒருவரை அடக்கித் தம்மிடம் கொணர்ந்தால் போதும் எனவும் கூறினார்.

உடனே சிவப்பிரகாசர் திருச்செந்தூரை

யடைந்து அங்கு அப்புலவரைப் பற்றி விசாரிக்கையில் “ கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது போல் ” அப்புலவரே வலிய வந்து இவரை யடைந்தார். உடனே இருவரும் வாது செய்ய முற்பட்டனர். இருவருள் யார் முதலில் திருச்செந்தூரைக் குறித்து நிரோட்டயமக அந்தாதி பாடுகிருரோ அவரே வென்றவர் என்று பந்தயம் குறிக்கப்பட்டது. சிவப்பிரகாசர் விரைந்து முப்பது பாடல்களைப் பாடி முடித்தார். அக்காலே வாது செய்ய வந்த புலவர் ஒரு பாடல் கூடப் பாடவில்லை. உடனே அவர் தாம் தோற்றதை ஒப்புக் கொண்டு சிவப்பிரகாசருக்கு அடிமையாயினுர். சிவப்பிரகாசர் அவரை அழைத்துக் கொண்டு சிந்துபூந்துறையை அடைந்து தம் குரு காணிக்கையைச் செலுத்தினர்.

பிறகு தம்பிரான் இவரைச் சில காலம் சிதம்பரத்தில் வசிக்குமாறு கட்டளையிட அவ்வாறே புறப்பட்டார். வழியில் துறைமங்கலத்தை யடைந்து அங்கு அண்ணுமலே ரெட்டியாரால் தமக்கென அமைக்கப்பட்ட மடத்தில் சில காலம் தங்கினுர். அப்போது தம் சகோதரருக்குக் கலியாணம் செய்து வைத்தார்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டுச் சிதம்பரத்தை அடைந்து அங்கு ஓர் மடம் ஏற்படுத்திக் கொண்டு வசித்து வரலானுர். அக்காலத்தில் நால்வர் நான்மணி மாலே, சிவப்பிரகாசம், தருக்கபரிபாஷை, சதமணி மாலே முதலிய நூல்களைச் செய்தார். அப்பால் அங்கிருந்து காஞ்சிமா நகருக்குப் புறப்பட்டார். வழியில் சாந்தலிங்க சுவாமிகள் என்னும் ஒருவர் அவருக்கு நட்பாளரானுர். அவருக்குத் தமது தங்கை ஞானம்பிகையை மணம் செய்து கொடுத்தார்.

பிறகு அவர் காஞ்சிக்குச் சென்று வாழ்ந்து வர லானுர். அக்காலே வேதாந்த சூடாமணி, சித்தாந்த சிகாமணி, பிரபுலிங்க லீலே முதலிய பல நூல் களே இயற்றினுர். பிறகு அங்கிருந்து தலயாத்திரை செய்வாராய்ப் பல ஊர்கட்குச் சென்ருர். அவ் வகையில் அவர் நல்லாற்றூரை யடைந்த போது அவரது தம்பியாராகிய கருணேப்பிரகாசர் இறைவன் திருவடி நீழலே அடைந்தார். அப்போது, அத்தம்பி, காளத்திபுராணம் என்னும் ஓர் நூலே இயற்றப் புகுந்தவர் பாதியில் விட்டுக் காலஞ் சென்ருராதலின், சிவப்பிரகாசர் அதனேத் தொடர்ந்து பாடத் தொடங்கி ஞர். ஆயினும் முடிப்பதற்குள் இவரும் அங்கேயே இறைவனடி அடைந்தார்.

சுவாமிகள் இறக்கும்போது அவருக்கு வயது முப்பத்திரண்டாம். அதற்குள் அவர் செய்த நூல்கள் மிகப்பல. நன்னெறி என்னும் சிறந்த நீதிநூல் அவ ரால் இயற்றப்பட்டதேயாம். சுவாமிகள் தமது சகோதர ருக்கு மண முடித்து வைத்தாரேயன்றித் தாம் துறவி யாகவே காலங் கழித்தார். அவ்வளவு குறைந்த வய திற்குள் அவர் கல்வி கற்று அவ்வளவு நூல்களேச் செய்து உலகில் தம் புகழை நிலே நாட்டியது மிக்க ஆச்சரியமான செயலாகும்.

## அரும்பதவுரை

தூய்மை - பரிசுத்தம்; எடுத்துக் காட்டு - உதாரணம்; தீக்ஷாகுரு - தீக்ஷை என்னும் சடங்கைச் செய்யும் குரு; தீக்ஷை - மத சம்பந்தமான பூசை முதலியவைகளேச் செய்வதற் காகத் தகுதி பெறுமாறு அதிகாரம் அளிப்பதாகிய ஒரு சடங்கு; அங்கம், அவயவம் - உறுப்பு; லிங்கதாரணம் - சிவலிங்கத்தை மார்பில் தரிப்பதற்குரிய தொரு மதச் சடங்கு; பிரபந்தம் - தமிழ் நூல் வகை; தொல்காப்பியம் - பழைமையான தமிழி

லக்கண நூல்; நட்பு - சிநேகம்; திரும்புகாலில் - திரும்பி வரும்போது; தம்பிரான் - துறவிகளுக்குரியதொரு பட்டப் பெயர்; முற்பட்டனர் - தொடங்கினர்; நிரோட்டயமக அந்தாதி - உதடுகளைச் சேர்த்து உச்சரிப்பதற்குரிய எழுத்துக் களாகிய ப, ம, வ ஆகியவை வராதவாறும் யமகம் என்னும் சொல்லணி பொருந்தி வருமாறும் பாடப்படும் அந்தாதி என்னும் ஒருவகைப் பிரபந்தம்; யமகம் - பாட்டில் அடிகள் தோறும் முதலில் சில எழுத்துக்கள் ஒரே விதமாகவும் ஆனால் அதனால் உண்டாகும் சொற்கள் பலவாய் வெவ்வேறு பொருள்கள் அமைந் தும் வருமாறு அமைப்பது; அந்தாதி - முதற் பாட்டின் அந்தம் அதாவது முடிவு அடுத்த பாட்டிற்கு ஆதி அதாவது முதலாய் வருமாறு பாடுவது; இவ்வகையில் முதற் பாட்டின் கடைசியில் வரும் சில சொற்களோ அல்லது சில எழுத்துக்களோ அடுத்த பாட்டின் முதலில் வருமாறு அமைக்கப்படும்; இறைவன் திருவடி நீழலை அடைந்தார் - இறைவனடி அடைந்தார் - காலஞ் சென்றார் - இறந்தார்; நிலை நாட்டியது - நிலைத்திருக் கச் செய்தது.

## வினாக்கள்

1. சிவப்பிரகாசரது ஊர் யாது? அவரது தந்தை, சகோ தரர் ஆகியோர் பெயர்களைக் கூறுக.

2. சிவப்பிரகாசரது தந்தை சிறந்த சிவபக்தர் என்பது எதனால் விளங்குகிறது?

3. லிங்கதாரணம், நிரோட்டயமக அந்தாதி இவற்றைப் பற்றி குறிப்பு வரைக.

4. சிவப்பிரகாசர் யாரிடம் இலக்கண நூல்களைக் கற்றார்? அவருக்குக் குரு தக்ஷிணையாக அவர் கொடுத்தது என்ன?

5. சிவப்பிரகாசர் இயற்றிய நூல்களில் நான்கு கூறுக.

6. சிவப்பிரகாசரை குருவாகக் கொண்டு வழிபட்டவர் யார்?

## பயிற்சி

1. அங்கம், நட்பு—இவற்றின் பொருளையே கொண்ட வேறு சொற்களைக் கூறுக.

2. ஆதி, சேர்த்து, தொடங்கி, துன்பம்—இச் சொற்களுக்கு எதிர்ப்பதம் கூறுக.

3. வாக்கியங்களில் அமைக்க: மறதி, செய்தி, தொல்காப்பியம், பிரபந்தம்.

4. சிவப்பிரகாசர் குரு தக்ஷிணை கொடுத்த வரலாற்றைச் சுருக்கி ஒரு கட்டுரையாக வரைக.

5. பின்வரும் இரண்டு வாக்கியங்களைப் படி; அவை கருத்து மாருமல் வேறு வேறு வகையில் அமைந்திருப்பதைக் கவனி :

(1) சிவப்பிரகாசர் பல நூல்களைக் கற்ருர். சிவப்பிரகாசரால் பல நூல்கள் கற்கப்பட்டன. இவ்வாறே பொருள் வேறுபடாமல் வேறு வேறு வகையில் பின் கண்ட வாக்கியங்களை மாற்றி எழுது.

(1) சிவப்பிரகாசர் குருவுக்குக் காணிக்கை செலுத்தினர்.

(2) அவரால் பல நூல்கள் இயற்றப்பட்டன.

(3) நன்னெறி சிவப்பிரகாசரால் இயற்றப்பட்டது.

(4) சிவப்பிரகாசர் வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இலக்கண நூல்களைக் கற்ருர்.

## இலக்கணம்

### பகாப்பதம் - பகுபதம்

தமிழ்ச் சொற்களில் சில, பல பிரிவுகளாகப் பிரிக்க இயலாத முறையில் அமைந்துள்ளன. அவை பகாப்பதங்கள் எனப் படும். [பகா + பதங்கள்—பிரிக்க இயலாத பதங்கள்].

(உ - ம்.) மரம், கல், கடல், வலை.

தமிழ்ச் சொற்களில், சில பல பிரிவுகளாகப் பிரிக்க இயலும் முறையில் அமைந்துள்ளன. அவை பகுபதங்கள் எனப்படும். [பகு + பதங்கள்—பிரிக்க இயலும் பதங்கள்].

(உ - ம்.) வலைஞன் = வலை + ஞ் + அன்.

செய்தான் = செய் + த் + ஆன்.

பகுதி, விகுதி, இடைநிலை

பகுபதத்தின் முக்கியமான பிரிவுகள் பகுதி, விகுதி, இடைநிலை என மூன்ரும்.

பகுதி என்பது பகுபதத்தின் முதலிலுள்ள பிரிவு.

விகுதி என்பது பகுபதத்தின் இறுதியிலுள்ள பிரிவு.

இடைநிலை என்பது பகுபதத்தின் நடுவிலுள்ள பிரிவு.

(உ - ம்.) வலைஞன்—இதில்,

வலை - பகுதி ; அன் - விகுதி ; ஞ் - இடைநிலை.

செய்தான் - இதில்,

செய் - பகுதி ; ஆன் - விகுதி ; த் - இடைநிலை.

## 2. ஏறு தழுவுதல்

**ஏறு தழுவுதல்** என்பது வலி மிக்க ஒரு காளை மாட்டைப் பற்றி அதனோடு போரிட்டு அதன் வலிமை கெடச் செய்து அதனை அடக்குதலாம். இது நெடுங் காலமாக நமது பாரத நாட்டில் ஆயர்குல மக்க ளிடையே நிலவி வரும் ஓர் கொண்டாட்டமாம். **கலித் தொகை** என்னும் தமிழ் நூலில் **முல்லைக் கலி** என்னும் பிரிவு இதனை நன்ருக விரித்து உரைக் கின்றது.

காடும், காடு சேர்ந்த இடமும் **முல்லை நிலம்** எனப்படும். **கலி** என்பது ஒரு வகைச் செய்யுள். எனவே, முல்லைக் கலி என்பது 'முல்லை நிலத்தவர் களாகிய ஆயர்களது செய்திகளைக் கலிப்பா என்னும் ஒருவகைப் பாவால் கூறும் பகுதி' எனப் பொருள் படும். **கலித் தொகை** என்பது கலிப்பாக்களின் சேர்க்கையாலானதொரு நூல். இது **எட்டுத்தொகை** நூல்களுள் ஒன்று. எட்டுத் தொகை நூல்களாவன : நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புற நானூறு என்பன. இவை சங்க காலத்தில் இயற்றப் பட்ட பாடல்களின் தொகுதியாகையால் **சங்க நூல்கள்** எனப்படும்.

பண்டைக் காலத்தில் முல்லை நிலத்து ஆயர் இக் கொண்டாட்டத்தைப் பெரும்பாலும் மணவினையின் பொருட்டும், சிறுபான்மை விநோதப் பொழுது போக் காகவும் நிகழ்த்துவர். மணவினை பொருட்டு நிகழ்த்து வதாவது, இன்ன காளையை அடக்குபவனுக்கு இன்னர் மகள் மணம் செய்து கொடுக்கப்படுவாள்

என்று பந்தயம் வைத்து அதற்கெனக் கொண்டாட்டம் நிகழ்த்துவதாம். இக்காலத்தில் இதன் சிறப்பெல்லாம் போய் ஏதோ பேருக்கு மட்டும் நடத்தப்படுகிறது. இக்காலத்தில் பொங்கல் கழிந்தபின் மூன்றும் நாள் 'மாடு பிடி' என்று நடக்கும் கொண்டாட்டம் ஏறு தழுவலின் சின்னமாகும்.

இனிப் பண்டைக் காலத்தில் ஏறு தழுவுதல் எவ்வாறு நடத்தப்பட்டது என்று பார்ப்போம்.

முல்லை நிலத்து ஊர்களில் ஆங்காங்கு ஏறு தழுவுதலுக்கெனப் பெரிய வெளியிடங்கள் உண்டு. அங்கே அவ்வெளியிடங்களைச் சுற்றி மக்கள் உயரமான இடங்களில் பத்திரமாக இருந்து வேடிக்கை பார்க்குமாறு பரண்கள் அமைக்கப்பட்டிருக்கும். அப் பரண், மிடை எனப்படும். கொண்டாட்டத்தின் போது ஊரவர் யாவரும் ஆண் பெண் குழந்தைகள் அடங்கலும் அந்தப் பரண்களின்மேல் வந்து அமர்ந்து கொள்வார்கள்.


ஏறு தழுவுதல் இல்லாமல் பண்டைக் காலத்தில் ஆயர்குலப் பெண்களுக்கு மணவினை நடப்பதில்லை எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. பந்தயங்களில் வென்று மணம் புரிந்துகொள்வதையே மேன்மையாகக் கருதுவர் ஆயர். போராட்டத்திற்கெனக் கொணரப்படும் காளைகள் பிறந்தது முதலே முற்றூட்டாக விடப்பட்டுத் தன்னியல்பில் கட்டுக்கடங்காமல் வளர்ந்து கொடூரமும் வலிமையும் பொருந்திய சிறந்த காளைகளாயிருக்கும். அவற்றை இக்காலத்திற்போலக் கயிறு கட்டிப் பிடித்துக்கொள்ளாமல், இஷ்டப்படி ஓடியாடிப் போர் புரியும்படி விடுவார்கள். அக் காளைகளின் கொடூரப் பார்வையும், சினத்தால் அவை தம் கால்களைப் பூமியில் உதைத்துக்கொள்ளும் தன்

மையும், அவற்றின் முக்காரத் தொனியும் பார்ப்பவர்களை நடுங்கச் செய்யும்.

ஆயினும் முல்லைநில ஆயர்குல இளைஞர்களுக்கு இவைகளோடு போராடி அடக்குவது ஓர் விளையாட்டாகும். அவ்விளைஞர்கள் உயர்ந்து வளர்ந்து திண்ணிய உடலமைப்பு வாய்ந்து அஞ்சா நெஞ்சம் படைத்து விளங்குவோராவர். பலகாலும் ஏறுகளுடன் போராடிப் பழகியவர்கள். அவர்கள் ஏறுகளுடன் போராடுவது புலியுடன் புலி எதிர்த்துப் போரிடுவதை நிகர்க்கும்.

போர் ஏறுகளைக் குறித்து முல்லைக் கலியுள் விரிவாகப் பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுட் சிலவற்றை இங்குக் கூறுவோம். அவ்வேறுகளில் சில, ஆகாயத்தில் விளங்கித் தோன்றும் பூர்ண சந்திரன் போலவும், திருமாலின் கையில் தோன்றும் சங்கு போலவும் அழகிய நெற்றிச் சுட்டியைக் கொண்டனவாய கரிய நிறமுடைய காளைகளாம். வேறு சில, அந்திச் செவ்வானம்போல அழகிய வெள்ளைப் புள்ளிகளுடன் கூடிய சிவப்பு நிறமுடைய சிவலைகள்; மற்றும் சில, சிவபெருமான் கழுத்தில் தோன்றும் கரிய கறையைப் போன்ற கருநிறத்தைக் கொண்ட கழுத்தையும், உயர்ந்த திமிலினையும் உடைய கபில நிறத்தனவாகிய குராங்களாம். இவை யெல்லாம் மத யானையைக் காட்டிலும் அச்சந்தரத் தக்கவை. அவை இடைவிடாமல் கால்களால் தரையை வெட்டி மண்ணைத் தூசியாகத் தூவுபவை. கொம்புகளால் மண் கட்டிகளைக் குத்தித் தூக்கிக்கொண்டு திரிபவை. இப்போராட்டத்திற்கென இவற்றின் கொம்புகள் மழுப் போலவும், முள்ளின் முனைபோலவும் சீவிவிடப்பட்டிருக்கும்.

இனிப் போராட்டத்தைப் பற்றிக் கவனிப்போம். குறித்த நேரத்தில் பறை, கொம்பு, முழவு முதலிய வாத்தியங்கள் இடிபோல முழங்கும். தொழுவங்களைத் திறந்து மாடுகளை வெளியிடத்தில் செல்ல விடுவர். ஏறு தழுவும் இளைஞர் உடனே தத்தமக்குரிய ஏறுகளின் மீது பாய்ந்து பிடிக்க முற்படுவர். அவர்களில்



ஏறுடன் போர் செய்தல்

சிலர் அவற்றின் கொம்புகளை இறுகப் பற்றி முறுக்கி அவற்றை அடக்குவர். வேறு சிலர் அவற்றின் கொம்புகளினிடையே பாய்ந்து கழுத்தின் மீது படுத்து அவற்றின் கொண்டை முறியும்படி தழுவி அவற்றை அடக்குவர். மற்றும் சிலர் தங்கள் தோள்களுக்கு நடுவில் அவற்றின் கழுத்தைச் செல்லவிட்டு நெருக்கிப் பிடித்து அடக்குவர். இளைஞர்கள் காளைகளைக் அடக்குவதே பெரும்பாலும் நிகழும் செய்தி

யாம். ஆயினும் சில சமயங்களில் இளைஞரை அக் காளைகள் குத்திக் கொல்லுவதும் உண்டு. அப்போது அவர்கள் குடர்கள் சரியவும், கைகால்கள் முறியவும், உடல்கள் நசுங்கி உறுப்புக்கள் அழியவும் நேர்ந்து மிக்க துன்பத்திற்கு ஆளாவதும் உண்டு. ஆயினும் அவர்கள் அத்துன்பத்தைப் பொருட்படுத்த மாட் டார்கள். அவர்களது உறவினரும் அதனை அவ்வள வாகப் பொருட்படுத்துவதில்லை.

அந்தந்த ஏற்றை அடக்கியவனுக்கு அந்தந்த ஏற் றுக்கு உரிய பந்தயப் பொருளாக வைக்கப்பட்ட பெண்ணை மணம் செய்து கொடுப்பார்கள். ஸ்ரீ கிருஷ்ண பகவான் இவ்வாறு ஏழுவலிய காளைகளை அடக்கி, நப்பின்னை என்னும் ஆயர்குலப் பெண்ணை மணந்துகொண்டதாகத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

ஏறு தழுவுதற்கு முதல் நாள் மாலையிலாவது ஏறு தழுவின அன்று மாலையிலாவது ஆயர் குலப் பெண்கள் ஒன்று கூடி ஊர்ப் பொது மன்றத்திலே குரவைக் கூத்து ஆடுவர். குரவைக் கூத்தாவது ஏழு பேரோ அல்லது ஒன்பது பேரோ கூடிக் கைகோத்து வட்டமாக நின்று பாடியாடும் ஒரு வகைக் கூத்து ஆகும். ஏறு தழுவுதற்கு முதல் நாளாயின் அப்பெண்கள் இளைஞர்களை ஏறு தழுவு மாறு தூண்டுதற்குரிய பாடல்களைப் பாடுவார்கள். ஏறு தழுவிய நாளாயின் ஏறு தழுவிப்பெற்ற வெற்றி யைக் குறித்து மகிழ்ந்து பாடுவார்கள். அப்பாட்டுக் களில் இரண்டை இங்கே கூறுவோம்.

“ கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்.”

" கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன் வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ !"

ஏறு தழுவுதலாகிய இக்கொண்டாட்டம் முல்லை நிலத்து ஆயர் வீரத்தைப் புலப்படுத்துவதாகும். பண்டைத் தமிழர் வீரந்தான் என்னே !

அரும்பதவுரை

ஏறு - காளைமாடு ; ஆயர் - இடையர் ; பகுதி - பிரிவு ; தொகை நூல் - பலருடைய பாடல்களை ஒன்று சேர்த்து ஆக்கப் பட்ட நூல் ; மணவினை - கலியாணம் ; நிகழ்த்துவது - நடத்துவது, செய்வது ; சின்னம் - அடையாளம் ; பரண் - மேடை ; முற்றூட்டு - மனிதர் கறந்துகொள்ளாமல் மாட்டின் பால் முழுவதையும் கன்றே உண்ணுமாறு விட்டுவிடுதல் ; முக்காரம் - எருதின் சத்தம் ; தொனி - சத்தம் ; திண்ணிய - வலிமை பொருந்திய ; நெற்றிச்சுட்டி - நெற்றியில் காணும் நிறம் ; சிவலை - சிவப்புக் காளை ; குரால் - கபில நிறக் காளை ; மழு - கூர்மையான இருப்பாயுதம் ; கொண்டை - திமில் ; மன்றம் - பலர் கூடும் இடம் ; கொல்லேறு - கொல்லும் தன்மை வாய்ந்த காளை ; கோடு - கொம்பு; புல்லாள் - சேரமாட்டாள்; குணிலா - குறுந்தடியாக ; ஆனுள் - பசுக்கூட்டத்துள் ; கொன்றையந் தீங்குழல் - கொன்றைக் காயைக்கொண்டு செய்யப்பட்ட குழல் வாத்தியம்.

வினாக்கள்

1. ஏறுதழுவுதலாவது யாது ? அதைப் பற்றி எந்நூல் கூறுகின்றது ?

2. ஏறுதழுவுதலாகிய கொண்டாட்டத்தில் விடப்படும் மாடுகளைப் பற்றித் தமிழ் நூல்கள் கூறுவது என்ன ?

3. ஏறுதழுவுதல் எவ்வாறு நடைபெறும் ? எதற்காக நடைபெறும் ?

4. இளைஞர் ஏறுகளை எவ்வாறு அடக்குவர் ?

பயிற்சி

1. கலித்தொகை, முல்லைக்கலி, மிடை, குரவைக் கூத்து இவற்றைப் பற்றிக் குறிப்புகள் வரைக.

2. இப்பாடத்தால் விளங்கும் ஆயர்குல வழக்கங்கள் எவை?

3. எட்டுத்தொகை நூல்கள் எவை?

4. வாக்கியத்தில் அமைக்க: ஏறு, மிடை, முற்றூட்டு, சின்னம், மன்றம்.

5. பண்டைக்காலத்தில் ஏறுதழுவுதல் நிகழ்ந்த விதத்தைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

6. நீ பார்த்த மாடுபிடிக் கொண்டாட்டம் ஒன்றை விவரிக்க.

## இலக்கணம்

### பண்புப்பெயர் – தொழிற்பெயர்

ஆறுவகைப் பெயர்ச் சொற்களில் பண்புப் பெயர், தொழிற் பெயர் இவைகளைக் குறிக்கச் சில விகுதிகள் உண்டு. பண்புப் பெயர் விகுதிகளுள் முக்கியமானது மை என்னும் விகுதி. இவ் விகுதி பெற்ற பெயர்கள் **மையீற்றுப் பண்புப் பெயர்கள்** எனப்படும்.

மையீற்றுப் பண்புப் பெயர்களில் சில:

நன்மை, தீமை, சிறுமை, பெருமை, அண்மை, சேய்மை, கருமை, செம்மை, பசுமை, வெண்மை, நுண்மை.

சி, பு, பம், அம் என்பவைகளும் பண்புப் பெயர் விகுதி களாக வரும்.

(உ - ம்.) குளிர்ச்சி — சி - விகுதி.
புளிப்பு — பு - விகுதி.
நுட்பம் — பம் விகுதி.
நலம் — அம் விகுதி.

தல், அல், அம், கை, பு, சி முதலியன தொழிற் பெயர் விகுதிகளாம்.

(உ - ம்.) நடத்தல் — தல் - விகுதி.
ஆடல் — அல் - விகுதி.
ஓட்டம் — அம் - விகுதி.
இருக்கை — கை - விகுதி.
நட்பு — பு - விகுதி.
தேர்ச்சி — சி - விகுதி.

## 3. புலவர் அறவுரை

பண்டைத் தமிழரசர் நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவர்கள்; வீரத்தில் சிறந்தவர்கள்; தாங்கள் ஆளும் நாடு எல்லாவகையிலும் சிறந்து விளங்க வேண்டும் என்னும் நாட்டம் உடையவர்கள்; குடிகள் நலத்தில் கண்ணுங்கருத்துமாய் இருந்தவர்கள்.

பண்டைத் தமிழ்ப் புலவர்கள் கல்வி கேள்விகளில் மேம்பட்டவர்கள். ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள். செல்வத்தை ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்கள்; "நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை" என்று எண்ணுவார்கள்.

பண்டைத் தமிழரசர்க்கும் தமிழ்ப் புலவர்க்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அரசர்கள் செல்வத்தாலும் வீரத்தாலும் அதிகாரத்தாலும் உயர்வாக விளங்கினுர்கள் என்றுலும் பணிவும் அடக்கமும் உடையவர்கள். கல்விக்கும் நல்லொழுக்கத்திற்கும் மதிப்புக் கொடுப்பவர்கள். அதனுல் புலவர்களிடம் அவர்கள் பெருமதிப்புக் கொண்டார்கள். அவர்களால் புகழ்ந்து தாம் பாடப்பெறுவதை ஒரு பெரும் பேருக எண்ணினர். தமிழ்ப் புலவர்களோ அரசர்களிடம் அன்பும் மரியாதையும் உடையவர்களாய் அவர்கள் நலமே தங்கள் நலம் என்று எண்ணுபவர்களாய் இருந்தார்கள். அதனுல் அரசர்கள் முறை தவறி நடக்குங்கால் அவர்களுக்கு அறவுரை கூறி அவர்களை நல்வழிப் படுத்திவந்தார்கள். இவ்விதம் நல்வழிப்படுத்தியதற்கு ஈண்டு ஓர் வரலாறு கூறுவோம்.

பண்டைக்காலத்தில் **கிள்ளிவளவன்** என்ற ஒரு சோழ அரசன் இருந்தான். அவன் **காவிரிப்பூம்**

பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்டுவந்தான்.

அக்காலத்தில் திருக்கோவலூரில் மலையமான் திருமுடிக்காரி என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் கொடையிலும் வீரத்திலும் சிறந்தவன். அவன் பெருவீரனாயிருந்தது பற்றித் தமிழ் மூவேந்தர்கள் தாங்கள் ஒருவரோடொருவர் போரிடுங் காலங்களில் அவனைத் தமக்கு உதவியாக வரவேண்டுமென்று விரும்பியழைத்தனர். அவனும் அவர்களுள் இளைத்தவர்பக்கம் சேர்ந்து உதவிசெய்து அவர்களுக்கு வெற்றியுண்டாகுமாறு செய்துவந்தான்.

மேற்கூறிய கிள்ளிவளவனுக்கும் மலையமான் திருமுடிக்காரிக்கும் எக்காரணத்தாலோ பகை ஏற்பட்டது. அதனால் உண்டான போரில் மலையமான் இறந்துபட்டான். கிள்ளிவளவன் அவனைக் கொன்றதோடு நில்லாமல் அவன் குலத்தையே வேரறுக்க முற்பட்டான். சிறுகுழந்தைகளாயிருந்த மலையமான் மக்களை அவன் கொல்லத் தீர்மானித்தான்.

இச்செய்தியைக் கேள்வியுற்றார் ஒரு புலவர். அவர் கோவூர்க்கிழார் என்னும் பெயரினர். அவரது ஊர் கோவூர். அவர் கல்வி கேள்விகளில் வல்ல சிறந்த புலவராயிருந்தபடியால் அவரது பெயரைச் சொல்லி அவரை யழைக்காமல் மக்கள் அவருடைய ஊரின் பெயராலேயே அவரை அழைத்து வந்தார்கள். அதனால் அவரது இயற்பெயர் மறைந்துபோய் ஊரைப் பொறுத்த பெயராகிய கோவூர்க்கிழார் என்னும் பெயரே நிலைத்தது. அவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டவராயிருந்தது போலவே தைரியத்திலும் மிக்கவராயிருந்தார். தவறு செய்பவர் யாவராயிருந்தாலும் அவர்கள் அரசராகவே இருந்தாலும், அஞ்சாது, அவர்

அவர்களை இடித்துக் கூறி நல்வழிப்படுத்த முயலு வார். அவ்விதம் இடித்துக் கூறுங்கால் மிகவும் நய மாக இடத்திற்கேற்றபடி கூறும் ஆற்றல் உடையவர். கிள்ளிவளவனது இரக்கமற்ற செயலைக் கேள்வி யுற்றதும் இப்புலவர் விரைந்து அவனிடம் சென்று அவனுக்கு அறவுரை கூற முற்பட்டார்.

புலவர் சென்றபோது, அரசன் ஊர்ப் பொது மன்றத்தில் உயர்ந்ததொரு மேடைமீது சிறந்ததொரு ஆசனத்தில் வீற்றிருந்தான். அவனருகில் அமைச் சர் முதலிய பரிவாரத்தார் அவரவர்க்குரிய இருக்கை களில் அமர்ந்திருந்தனர். மன்றத்தைச் சுற்றிப் பெரியதொரு கூட்டம் நின்றுகொண்டிருந்தது. மன் றத்தின் நடுவில் அரசனுக்கு எதிரில் மலையமான் மக்கள் கொணர்ந்து நிறுத்தப்பட்டிருந்தனர். அவர் கள் ஓடிப் போகாவண்ணம் அவர்களைக் காவலர் பிடித்துக்கொண்டு நின்றனர். சிறிது தூரத்தில் யானை யொன்று நிறுத்தப்பட்டிருந்தது.

புலவர் வந்ததைக் கண்ட அரசன் அவரை வரவேற்று உபசரித்துத் தன் அருகில் ஒரு தவசில் அவரை இருக்கச் செய்தான். பிறகு மலையமான் மக்களைக் குறித்துத் தீர்ப்புக் கூறுவானாய்,

“ இளைதாக முண்மரங் கொல்க களையுநர்
கை கொல்லும் காழ்த்த விடத்து,

எனத் தமிழ் மறை ஆணையிடுகின்றது. கொடிய பகைவனது மக்களாகிய இவர்களை இப்பொழுதே கொல்லா விட்டால், பிற்காலத்தில் இவர்கள் பெரிய நச்சுமரமாய் வளர்ந்து எமது குடிக்கே அழிவைத் தேடுவார்கள். ஆதலால் இச்சிறுவரை யானைக்காலால் இடறுவித்துக் கொல்லுங்கள்?” என்று காவலர்க்குக் கட்டளை யிட்டான்.

உடனே புலவர் "கட்டளை சிறிது நிற்க; அரசே, எளியேனது சொல்லைச் சிறிது செவி சாய்த்துக் கேட்டருளுமாறு வேண்டுகிறேன்" என்றார். அரசன் "புலவரே, நீர் கூற வந்தது யாதோ?" என்று கேட்க, புலவர் பின்வருமாறு கூறலானார்.

"நீயோ கேவலம் ஒரு புருவிற்காகத் தன் சதை முழுவதையும் அரிந்தளித்த சிபியின் மரபிற் பிறந்தவன்; இந்தச் சிறுவர்களோ கற்றுவல்ல புலவரது வறுமைத் துன்பத்தை நீக்குதற்காகத் தமது பொருளைப் பங்கிட்டுக் கொடுக்கும் கொடையாளிகளின் வமிசத்தில் பிறந்தவர்கள். இவர்கள் முதலில் உன்னையும் உன்னைச் சுற்றியிருக்கும் இக்கூட்டத்தையும் கண்டு பயந்து அழுது, இப்போது இந்த யானையைக் கண்ட வியப்பால் தமது அழுகையை மறந்து நிற்கும் அறியாமையையுடைய சிறிய பிள்ளைகள். இதோ இப்பொழுதும் மறுபடியும் பயந்து அழத் தொடங்குகின்றனர். யான் கூற வந்ததைக் கூறிவிட்டேன். இனி நீ உன் விருப்பப்படி நடப்பாயாக!"

இச் சொற்களைக் கேட்ட அரசன் தனக்குள், "ஒரு புருவிற்காகத் தன் உயிரையே கொடுக்க முன்வந்த அரசரது குலத்திற் பிறந்த நாம் இப்பிள்ளைகளைக் கொல்லலாமா? இப்பிள்ளைகளின் வரலாற்றைக் கூறவந்த புலவர், அவர்கள் தமக்கு உற்றவர்கள் என்பதைக் குறிப்பாக உணர்த்துவாராய், இவர்கள் புலவர் வறுமையைப் போக்கும் வள்ளலது மரபில் வந்தவர் எனக் கூறினார்; பிறகு சிறுபிள்ளைகளைக் கொல்வது பெரும்பாவம் என்பதையும் சொல்லாமற் சொன்னார்; பயத்தையும் வியப்பையும் மாறி மாறி யடைந்த அவர்களது அறியாச் செய்கையை

அவர் கூறியது என் மனத்தை உருக்குகின்றது; தங்களைக் கொல்வதற்காகக் கொணரப்பட்ட யானை என அறியாது, அவர்கள் அதனைக் கண்டு வியப்படைந்து அழுகையை நிறுத்தினதைப் புலவர் சுட்டிக்காட்டியது, என் உள்ளத்தை அள்ளுகின்றது. இனி யாது வரினும் வருக! இச்சிறுவரால் பிற்காலத்தில் என் குடிக்குக் கேடு நேருமாயினும் அதனைப் பொருட்படுத்தமாட்டேன்! இவர்களை விடுவித்து இவர்களுடைய உறவினரிடம் இவர்களைச் சேர்ப்பித்தலே தக்கது!'' என எண்ணினன்.

பிறகு காவலரை நோக்கி, ''இக்குழந்தைகளை இவர்களது உறவினரிடம் சேர்த்து விடுங்கள். யானையைக் கட்டுத்தறிக்குக் கொண்டு செல்லுங்கள்!'' என்றான். அப்பால் அப்புலவரை நோக்கி, ''அருங்குணச் செம்மலே, இன்று என் அறியாமையால் யான் செய்யவிருந்த பெரும் பாவத்தை யான் செய்யாதவாறு செய்து என்னைப் பாதுகாத்தீர்! நீர் வாழ்க!'' எனக் கூறிப் பெருமைப் படுத்தினன்.

## அரும்பதவுரை

**நாட்டம்** - கருத்து, நோக்கம்; **கேள்வி** - பெரியோர் வாயிலாக நூற்பொருள்களைக் கேட்டல்; **'' நாடெங்கும் இல்லை ''**—உலகத்தார் யாவரும் நன்றாக வாழ்ந்தால் யாவருக்கும் எவ்விதத் துன்பமும் ஏற்படாது; **தொடர்பு** - சம்பந்தம்; **பேறு** - பெற வேண்டிய நன்மை; **அறவுரை** - தர்மோபதேசம் - நீதியை எடுத்துக் கூறுதல்; **பெயரினர்** - பெயரை உடையவர்; **இயற்பெயர்** - இயற்கையான பெயர், பிறந்தபோது பெற்றோரால் இடப்பட்ட பெயர்; **இடித்துக் கூறுதல்** - செய்தது தவறு என்று நன்கு புலப்படுமாறு எடுத்துக் கூறுதல்; **ஊர்ப் பொது மன்றம்** - ஊராருக்குப் பொதுவாய் ஊரைச்சார்ந்து உள்ள பொதுவிடம்; இங்கே வழக்கு விசாரணை செய்வது வழக்கமாம்;

ஆசனம் - தவிசு, இருக்கை; நச்சுமரம் - விஷக்கனிகளைத் தரும் மரம்; எளியோன்-எளிமையையுடையோன்; மரபு-குலம்; வம்சம்; வள்ளல் - பெருங் கொடையாளி; செம்மல் - சிறந்த நற்குணங்களையுடையவர்.

## வினாக்கள்

1. பண்டைத் தமிழரசர் எப்படிப் பட்டவர்கள்?
2. பண்டைத் தமிழ்ப் புலவர்கள் எப்படிப்பட்டவர்கள்?
3. கிள்ளிவளவன் யார்? அவனுக்கும் யாருக்கும் பகை உண்டாயிற்று?
4. கிள்ளிவளவன் செய்த தவறு யாது? அதைத் திருத்த முற்பட்டவர் யார்?
5. கோவூர்க்கிழார் கிள்ளிவளவனிடம் சிறுவர்களைப் பற்றிக் கூறியதென்ன?
6. கோவூர்க்கிழார் கூறியதைக் கேட்ட கிள்ளிவளவன் தனக்குள் எண்ணியது யாது? செய்தது யாது?

## பயிற்சி

1. கோவூர்க்கிழார் கிள்ளிவளவனை நல்வழிப் படுத்திய வரலாற்றை உன் சொந்த நடையில் ஒரு கட்டுரையாக எழுதுக.

2. பின் வருவனவற்றைப் பிரித்து எழுதுக: பண்டைத்தமிழ்ப் புலவர்கள், தமிழரசர்கள், அறவுரை, பெருவீரன், நச்சுமரம்.

3. பின் வருவனவற்றை ஒன்று சேர்க்க: தமக்கு + உதவி; சிறுமை + குழந்தை; நிறுத்தப்பட்டு + இருந்தது; சுற்றி + இருக்கும்; சுட்டி + காட்டியது.

## இலக்கணம்

பெயர்ச் சொற்களின் வகைகளில் சில பெயர்கள் காரணம் கருதி இடப்பட்ட பெயர்களாகவும், வேறு சில, யாதொரு காரணமும் இல்லாமல் இடப்பட்ட பெயர்களாகவும் இருக்கும். காரணம் கருதி இடப்பட்ட பெயர்கள் காரணப் பெயர்கள் எனப்படும்.

(உ - ம்.) சிலம்பு-இது ஒலித்தலாகிய காரணம்பற்றி வந்த காரணப் பெயர்.

வளையல் - வளைந்திருக்கும் காரணம்பற்றி வந்த காரணப் பெயர்.

காரணம் கருதாமல் இடப்பட்ட பெயராக வருவன இடுகுறிப் பெயர்களாம்.

(உ - ம்.) மரம், கல், கடல்.

எண்ணிக்கையைக் குறிக்கும் பெயர்கள் எண்ணுப்பெயர்கள் எனப்படும்.

(உ - ம்.) ஒன்று, இரண்டு, பத்து, நூறு, ஆயிரம்.

அளவைக் குறிக்கும் பெயர்கள் அளவைப் பெயர்களாம்.

(உ - ம்.) வீசை, பலம், மரக்கால், படி, கஜம், அடி.

உறவின் முறைப் பெயர்கள் முறைப்பெயர்கள் எனப்படும்.

(உ - ம்.) தந்தை, தாய், அண்ணன், தம்பி.

பல பொருள்களுக்குப் பொதுவாய் வரும் பெயர் பொதுப் பெயர் எனப்படும்.

(உ - ம்.) மரம், பறவை, மிருகம்.

ஒரே பொருளுக்குச் சிறப்பாய் அமைந்தபெயர் சிறப்புப் பெயர் எனப்படும்.

(உ - ம்.) மா, பலா, காக்கை, நாய்.

## 4. நட்பிற்கிலக்கணமானவர்

ஒருவரோடொருவர் நெருங்கிப் பழகியவளாவுவாராய், ஒருவருக்கொருவர் உற்றிடத்து உதவி புரிந்து வாழ்பவர்கள் சிறந்த நட்பினராவர் என்பது யாவருமறிந்த தொன்றும். நட்பினர் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவேண்டிய தன்மையைக் குறித்துப் பொய்யில் புலவர்,

"உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு,"

எனக் கூறுகின்றார். அதாவது தன் நண்பனுக்கு இடுக்கண் நேர்ந்த காலத்து ஒருவன், உடுக்கை நெகிழ்ந்த காலத்து உடனே கைசென்று உதவுவது போல, தானாகவே விரைந்து சென்று வேண்டிய உதவி செய்யவேண்டும் என்பதாம்.

மேற்கண்டவாறு ஒழுகும் நட்பினரை நாம் சாதாரணமாய் பல விடங்களில் பார்க்கலாகும். ஆனால், ஒருவருக்கொருவர் காணுதிருக்கும்போது ஒருவர் குணங்களை மற்றவர் கேட்ட மாத்திரத்தானே சிறந்த உயிர் நட்பினராய் இருவர் அமைவதென்றால், அது எளிதில் நிகழக்கூடிய காரியமாகுமோ? இவ்வித நட்பாளரை **நட்பிற்கிலக்கணமானவர்** எனக் கூறல் தகுமன்றோ? இத்தகைய சிறப்பு வாய்ந்தவரது வரலாற்றை ஈண்டுக் காண்போம்.

இவர்களுள் ஒருவர் **கோப்பெருஞ்சோழர்**; மற்றொருவர் **பிசிராந்தையார்** என்னும் நல்லிசைப் புலவர்.

கோப்பெருஞ்சோழர் கடைச் சங்க காலத்தில் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சோழவள நாட்டை ஆண்டுவந்த சோழவரசர். அவர் கல்வியில்

சிறந்தவர் ; தமிழில் கவிகள் இயற்றவும் வல்லவர் ; அறத்தாறு இதுவென அறிந்து அவ்வழியொழுகு பவர் ; தமிழ்ப் புலவர்களிடத்து அன்பு மிக்கவர். பல புலவர்கள் அவர்பால் உண்மையான நட்புக் கொண்டிருந்தனர்.

இனி மற்றொருவராகிய பிசிராந்தையார் என்பவர் பாண்டிய நாட்டிலுள்ள பிசிர் என்னும் ஊரினர். இவர் பெயரிலுள்ள "ஆந்தை" என்னும் பெயர் "ஆதன்தந்தை" என்னும் பெயரின் மரூஉமொழி என்பர். ஆர் என்பது உயர்வைக் குறிக்க வந்த விகுதி. இவருக்கு யாண்டுபல ஆகியும் நரை ஏற் படாதிருந்தது. அதைக் கண்டு சான்றோர் சிலர் அதற்குக் காரணம் வினவினர். அதற்கு விடையாக இவர், "என் மனைவி மக்கள் அறிவாலும் குணத்தா லும் மேம்பட்டவர்களாயினர் ; எனது ஏவலாளர் யான் கூறியதைக் கூறியவாறே செய்து முடிப்பர் ; எனது நாட்டரசன் குடிகட்குத் தீமை ஏற்படாமல் நாட்டைப் பாதுகாப்பவன் ; எனது ஊரில் வயதிலும் அறிவிலும் மூத்து அடக்கத்தை மேற்கொண்ட சான்றோர் பலர் உள்ளனர்," என்று கூறினர். இவ்விடையில் "யான் எதைப் பற்றியும் கவலைகொள்ளுதற் கிட மில்லாமலிருத் தலால் கவலையே எனக்கு உண்டாகவில்லை" என்னும் செய்தி தொனிப்பதைக் காண்க.

புலவர் புரவலருடன் நட்புக் கொண்டொழுகும் செய்தியைப் பண்டைத் தமிழர் வரலாற்றில் சாதாரண மாய்க் காணலாகும். அப்புலவர்கள் அப்புரவலரைச் சார்ந்து நிற்பர் ; அவர்கள் மீது பாடல்களைப் பாடுவர். அப்புரவலர்கள் அப்புலவர்க்குப் பரிசில்கள் பல அளிப் பர். இத்தகைய செய்தியொன்றும் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழர் ஆகியோர்க்கிடையில் நடை

பெறவில்லை. ஆயினும் ஒருவர்மீதொருவர்க்கு மிக்க அன்பு ஏற்பட்டிருந்தது.

மிக்க அன்பு கொண்டவர்களில் ஒருவர் மனத்துள் ஏதேனும் ஒன்று தோன்றுமாயின் அது மற்றவர் மனத்திலும் தோன்றும் என்பதும், ஒருவருக்குத் துன்பமுண்டாயின் அது மற்றவர்க்குப் புலனுகும் என்பதும், நவீன கருத்துக்களாகக் கூறப்படுகின்றன. இக்கருத்துக்களை மெய்யாக்கும் செய்திகள் இவர்களது வாழ்க்கையில் நிகழ்ந்தனவாக நூல்கள் கூறுகின்றன. அச்செய்திகளை ஈண்டுக் கூறுவோம்.

கவிஞரும் காவலருமாகிய இவர்கள் ஒருவரையொருவர் காணுத நிலையில் குண நலன்களைக் கேட்ட மாத்திரத்தாலே நட்பாளராயினர் எனக் கூறினேம். இந்நிலையில் ஒருவர் விரும்பியதை மற்றெருவர் செய்வர் என்று கூறவியலுமோ? ஆயினும் தமது விருப்பத்தையேயன்றித் தம்மைச் சார்ந்தோர் என்று கூறுபவரது விருப்பத்தையும் சோழர் தவருது நிறைவேற்றுவார் என்னும் தமது நம்பிக்கையைப் புலவர் ஓர் அழகிய பாட்டால் தெரிவிக்கின்றுர். அப்பாட்டின் பொருள் :

"அன்னச் சேவலே! அன்னச் சேவலே! எமது அண்ணல் தமது நாட்டைக் காக்கும் முகம் போலச் சந்திரன் விளங்கும் இந்த மாலைக்காலத்தில் யாம் செயலற்று வருந்துகின்றேம்; நீ குமரியாற்றின் பெருந்துறையில் அயிரை மீன்களைத் தின்று, பின் வடதிசையிலுள்ள இமயமலைக்குச் சென்றுல், இடையில் சோணுட்டை அடைந்தபோது அங்குள்ள உறையூரில் அரசனது மாடத்தில் பெடையோடு தங்கி, அங்குள்ள காவலரைக் கேட்கவேண்டுமென்று கவலைப்படாமல் அரசன் அரண்மனைக்குள் புகுந்து,

அவ்வரசன் காதில் படுமாறு நான் பிசிராந்தையின் அடியுறை என்று சொல்வாயானல், அவன் உனது பெடை அணியுமாறு சிறந்த அணிகலன்கள் பல தருவான்,'' என்பதாம்.

இக்கூற்றில் அமைந்துள்ள அருமையான கருத்துக்களைக் கவனியுங்கள். இவற்ருல் புலவர் அரசனிடம் எத்தகைய நம்பிக்கை கொண்டிருந்தார் என்பது நன்கு விளங்கும்.

நிற்க, கோப்பெருஞ்சோழருக்கு இறுதிக் காலம் வந்துற்றது. மரணப் படுக்கையில் இருந்த அவர் ''என்னைப் பார்க்க இன்னும் சிறிது நேரத்தில் எனது நண்பரான பிசிராந்தையார் வருவார்'' என்ருர். அதுகேட்டு அருகிலிருந்தோர், ''அவரோ நெடுந் தொலைவில் பாண்டி நாட்டில் இருக்கின்ருர். உமக்கு உற்ற துன்பத்தை அவர் எப்படி அறிவார்? அறிந்தாலன்றி வர இயலுமா?'' என்றனர். அதற்கு அரசர் ''யாம் செல்வம் உடைய காலத்தில் அவர் வரவில்லையாயினும், யான் துன்புறும் இக்காலத்து அவர் வாராதிரார். என்னருகிலே அவருக்கு இட மொழித்து வைப்பீராக!'' என்று துணிந்து கூறினர்.

பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் அரசர் கூறியவாறே பிசிராந்தையார் வந்தார். ஆனல் அதற்குள் கோப்பெருஞ்சோழர் இறந்து விட்டார். அவரை அடக்கமும் செய்து விட்டனர். இறக்குமுன் அவர் கூறியவாறே, அவரருகில் பிசிராந்தையாருக்கு இடம் ஒழித்து வைக்கப்பட்டிருந்தது. வந்த புலவர் அதிற் படுத்து உயிர் நீத்தனர். என்னே நட்பின் திறம்!

இவ்வற்புதச் செயல்களைக் கண்ட பொத்தியார் என்னும் புலவர் ஆச்சரியம் தாங்கமாட்டாமல்,

“ நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே !
எனைப்பெருஞ் சிறப்பினோடு ஈங்கிது துணிதல்
அதனினும் மருட்கை யுடைத்தே !.........
... ... ... ... ... ...
வருவன் என்ற கோனது பெருமையும்
அது பழுதின்றி வந்தவன் அறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்றே !”

என்று சொல்லிச் சொல்லி வியப்புறுவாராயினர். கண்ணகனார் என்னும் மற்றொரு புலவர், ‘பொன்னும், பவளமும், முத்தும், மாணிக்கமும் ஒன்றுக்கொன்று நெடுந்தூரத்தில், நிலம், கடல், மலை, ஆகிய வேறு வேறு இடங்களில் தோன்றுமாயினும், நல்ல அணிகலன்களைச் செய்யுங் காலத்தில் அவை ஒன்றாய் ஓரிடத்துக் கூடிப் பொருந்தியிருப்பதுபோல, எப்பொழுதும் சான்றோர் சான்றோருடனேயே கூடியிருப்பர்; நற்குணமில்லாதார் நற்குணமில்லாதாருடனேயே கூடியிருப்பர் ?” என இவ்விருவரது நட்பைக் குறித்து வியந்து கூறியுள்ளார். இவ்விருவரையும் நட்புக் கிலக்கணமானவர் எனக் கூறுவது மிகையாகுமோ ?

### அரும்பதவுரை

உற்றிடத்து - உற்ற+இடத்து, சமயம் வந்து சேர்ந்த போது; பொய்யில் புலவர் - பொய் இல்லாத புலவர், திருவள்ளுவர்; உடுக்கை - உடுத்துக் கொண்டிருக்கும் துணி; இடுக்கண் - துன்பம்; களைவது - நீக்குவது; ஒழுகும் - நடக்கிற; நல்லிசைப் புலவர் - நல்ல கீர்த்தி வாய்ந்த புலவர் - நல்ல பாடல்களை இயற்றவல்ல புலவரென்பதுமாம்; அறத்தாறு - தருமமார்க்கம்; மரூஉமொழி - சொற்கள் மாறி வருவதால் உண்டான சொல்; யாண்டு - ஆண்டு, வருஷம் (இங்கு, வயது); மூத்து - (இங்கு) உயர்ந்து; தொனிப்பது - நுட்பமாகக் காணப்படுவது; புரவலர் - காத்தலில் வல்லவர், அரசர்; காவலர் - காத்தலில் வல்லவர், அரசர்; அடியுறை - பாதத்தருகில் இருப்பவன், நண்பன்; பெடை - பெண்

அன்னம், மனைவியாகிய அன்னம்; இறுதிக்காலம் - மரண காலம்; மருட்கை - ஆச்சரியம்; எனைப் பெரும் சிறப்பினொடு - எவ்வளவு பெரிய சிறப்பொடு, அதாவது நம்பிக்கையோடு; ஈங்கு இது துணிதல் - இங்கே இதைத் துணிந்து கூறுதல்; வியத்தொறும் - ஆச்சரியப்படும்போதெல்லாம்; வியப்பு இறந்தன்றே - வியப்பு எல்லைக் கடந்து விடுகிறது.

## வினாக்கள்

1. பிசிராந்தையாரும், கோப்பெருஞ் சோழரும் நட்பிற்கு இலக்கணமானவர் என்று கூறலாம். எப்படி?

2. கோப்பெருஞ் சோழரது குணங்களைக் கூறுக.

3. பிசிராந்தையாரை 'உமக்கு ஏன் நரை ஏற்படவில்லை?' எனக் கேட்டதற்கு அவர் கூறிய மறுமொழி என்ன?

4. எத்தகைய செய்திகள் கோப்பெருஞ் சோழர்க்கும் பிசிராந்தையாருக்கும் இடையில் நடைபெறவில்லை?

5. மிக்க அன்பு கொண்டவரைப் பற்றிய நவீன கருத்துக்கள் எவை? அவை கோப்பெருஞ் சோழர், பிசிராந்தையார் ஆகியோரிடையில் நிதர்சனமாயின என்பதற்கு ஒரு சான்று தருக.

6. கோப்பெருஞ்சோழர் இறக்கும் தருவாயில் கூறிய எச்செயல் உண்மையாயிற்று?

7. பொத்தியார், கண்ணகனார் ஆகியோர் இவ்விருவரது நட்பினைக் குறித்து வியந்து கூறியவற்றை முறையே கூறுக.

## பயிற்சி

1. இப்பாடத்தில் அரசர்க்குப் பெயராக வரும் மொழிகளைக் கூறுக.

2. இப்பாடத்தில் வரும் தமிழ்ப் புலவர்களைப் பற்றிச் சிறு குறிப்புகள் வரைக.

3. பிசிராந்தையார் அன்னச் சேவலைப் பார்த்துக் கூறியதாகச் சொன்ன வரலாற்றில் தோன்றும் சிறந்த கருத்துக்கள் எவை?

4. பின்வரும் பதங்களைப் பிரிக்க: நட்பிற்கிலக்கணமானவர், நல்லிசைப் புலவர், கடைச் சங்க காலத்தில், வியப்புறுவாராயினர்.

5. பின்வரும் பதங்களைச் சேர்க்க: கல்வியில் + சிறந்தவர்; கவிகள் + இயற்ற; கண்ட + சான்றோர்; புலவர் + புரவலருடன்; நவீன + கருத்துக்கள்; ஈண்டு + கூறுவோம்.

## இலக்கணம்

### பெயர்ச் சொற்களில் வேறு சில வகைகள்

**திணையைப் பொறுத்து வரும் பெயர்கள் :**

திணை, உயர்திணை, அஃறிணை என இரண்டாகையால் திணையைப் பொறுத்துவரும் பெயர்களும் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் என இரண்டாம்.

கண்ணன், கண்ணகி, சிறுவர்—உயர்திணைப் பெயர்கள். ஆடு, காக்கை, பலகை—அஃறிணைப் பெயர்கள்.

**பாலைப் பொறுத்து வரும் பெயர்கள்.**

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின் பால் எனப் பால் ஐந்து. ஆகையால் பாலைப் பொறுத்து வரும் பெயர்களும் ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர், பலர் பாற் பெயர், ஒன்றன்பாற் பெயர், பலவின்பாற் பெயர் என ஐந்தாம்.

வேலன், முருகன் — ஆண்பாற் பெயர்கள்.
வள்ளி, நங்கை — பெண்பாற் பெயர்கள்.
மக்கள், உழவர் — பலர்பாற் பெயர்கள்.
பசு, மரம் — ஒன்றன்பாற் பெயர்கள்.
பசுக்கள், மரங்கள் — பலவின்பாற் பெயர்கள்.

**எண்ணால் வரும் பெயர்கள் :**

ஒருமை, பன்மை என எண் இரண்டாகையால் எண்ணைப் பொறுத்துவரும் பெயர்களும் ஒருமைப் பெயர், பன்மைப் பெயர் என இரண்டாம்.

மனிதன், அது—ஒருமைப் பெயர்கள்.
மனிதர், அவை—பன்மைப் பெயர்கள்.

**இடத்தால் வரும் பெயர்கள் :**

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்றாகையால் இடத்தைப் பொறுத்து வரும் பெயர்களும், தன்மைப் பெயர், முன்னிலைப் பெயர், படர்க்கைப் பெயர் என மூன்றும்.

நான், நாம்—தன்மைப் பெயர்கள்.
நீ, நீர், நீங்கள்—முன்னிலைப் பெயர்கள்.
அவன், அவள், அவை—படர்க்கைப் பெயர்கள்

# 5. தேவந்தி

தமிழ் மகளிர்க்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கு பவள் கண்ணகி. அக்கண்ணகிக்கு பல தோழிமார் இருந்தனர். அவருள் பார்ப்பனத் தோழியான தேவந்தி என்பவளது வரலாறு விசித்திரமானது. நட்பின் திறத்தையும் அன்பின் திறத்தையும் நனி விளக்குவது. அவ்வரலாற்றை இங்குக் கூறுவோம்.

சோழ வளநாட்டிற்குத் தலைநகராய் விளங்கிய காவிரிப்பூம் பட்டினத்தில் பார்ப்பனன் ஒருவன் இருந் தான். அவனுக்கு இருமனைவியர் இருந்தனர். அவர் களுள் ஒருத்திக்கு ஓராண் குழந்தை பிறந்திருந்தது. மற்றொருத்தி பெயர் **மா**லதி. மாலதி தனக்குப் பிள்ளையில்லாமல் தன் மாற்றாளுக்கு மட்டும் பிள்ளை யிருப்பதைக்கண்டு பொறாமை கொள்ளவில்லை. அப் பிள்ளையையும் தன் பிள்ளையைப் போலவே கருதிப் பாராட்டி வளர்த்துவந்தாள்.

ஒருநாள் அவள் அக்குழந்தைக்குப் பால் புகட்டிய போது பால் விக்கிக் குழந்தை இறந்து போயிற்று. உடனே மாலதிக்குத் தான் உண்மையில் குற்றமற்ற வளாயினும் அந்நிலையில் தன்னை உலகம் குற்றமுள்ள வளாகவே கருதிப் பழிக்கும் என்பது தெற்றென விளங்கியது. உடனே அச்சம் வந்து அவளைப் பிடித்துக் கொண்டது. என்ன செய்வதென்றறி யாமல் சற்றுத் திகைத்தாள். பிறகு தெய்வச் செய லால் இச்செய்தி நிகழ்ந்த தாகையால் தெய்வங்களை வேண்டிக் குறையிரந்தால் இத்துன்பம் ஒருக்கால் தீரக்கூடும் என்று எண்ணினாள்.

அக்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் சிவன் கோயில், திருமால் கோயில், பலதேவன் கோயில்,

சாத்தன் கோயில், வாசவன் கோட்டம், வச்சிரக் கோட்டம் முதலிய பல கோயில்கள் இருந்தன. மாலதி யாருமறியாமல் குழந்தையைத் தூக்கிக்கொண்டு மேற்கண்ட கோயில்கட்கெல்லாம் ஆங்காங்குள்ள தெய்வங்களை யெல்லாம் அக்குழந்தைக்கு உயிர் கொடுத்தருளுமாறு வேண்டினாள்.

தெய்வங்களெல்லாம் ஒன்றும் பேசவில்லை. குழந்தை உயிர்பெற்று எழவில்லை. அதனால் அவள் வருந்தியிருக்கையில் இடாகினிப்பேய் ஒன்று பெண்வடிவம் கொண்டு அவளை யடைந்து, அவளிடத்தில் அநுதாபம் உள்ளதுபோல் பாசாங்கு செய்து, குழந்தையைத் தன்னிடம் தருமாறு கேட்டது. மாலதி குழந்தையை அதனிடம் கொடுத்ததும் அது குழந்தையைத் தின்றுவிட்டது.

அதனால் மேலும் மிகுந்த துன்புற்ற மாலதி அங்கு அருகிலிருந்த சாத்தன் கோயிலை அடைந்து பலவாறு புலம்பியழுதாள். அதனால் இரக்கங்கொண்ட சாத்தன், இறந்த குழந்தையைத் தான் தர இயலாதென்றும், அதற்குப் பதிலாகத் தானே ஒரு குழந்தையாய் வருவதாகவும், தன்னைக் கொண்டு செல்லுமாறும், அதனால் அவள் துன்பம் நீங்குமென்றும் கூறி, அவ்வாறே அவள் மடியில் ஓர் குழந்தையாய் வந்தமர்ந்தான். மாலதி அக்குழந்தையைக் கொண்டு சென்று ஒன்றுமறியாதவள்போல் இருந்துவிட்டாள். அக்குழந்தை பெரிதாக வளர்ந்து மணப்பருவம் அடைந்தது. அக்காலத்தில் தேவந்தி சாத்தனாகிய அக்குமாரனுக்கு மனைவியானாள்.

தேவந்தியோடு அக்குமாரன் எட்டு ஆண்டுகள் இனிது இல்லறம் நடாத்தி வந்தான். பின்பு அவன் அவளுக்குத் தன் வரலாற்றை எடுத்துக் கூறித் தான்

முன்போல் தெய்வவுருக் கொண்டிருக்க விரும்பு வதாயும், தன் கோவிலில் வந்து அவள் தன்னை வழி பட்டு வருமாறும் கூறி மறைந்தான். தேவந்தியும் அவ்வாறே தினமும் சாத்தன் கோயிலுக்குச் சென்று வழிபட்டு வருவளாயினுள்.

பின்பு தேவந்தி கண்ணகிக்குத் தோழியா யமைந்து அவளுடன் சேர்ந்து அளவளாவி வரலா னுள். கண்ணகி தன் கணவன் பிரிவால் வருந்தித் துன்புற்று அந்நிலையில் ஒரு கொடிய கனுக்கண்டு அதனை அவளிடம் கூறினுள். அதைக் கேட்ட தேவந்தி, அவளுக்குத் தேறுதல் கூறுவாளாய், " நீ கணவனுல் வெறுக்கப்படவில்லை ; முற்பிறப்பில் நீ ஒரு நோன் பைத் தொடங்கி அதை முடிக்காமல் இடையில் விட்டிருக்க வேண்டும் ; அதனுலேயே இத்துன்பம் நேரிட்டிருக்க வேண்டும் ; காவிரி கடலோடு கலக்கும் சங்க முகத்துறையில் **சோமகுண்டம்**, **சூரிய குண்டம்** என்னும் பெயரையுடைய இரண்டு குளங் கள் உள்ளன. அவை புண்ணிய நீர்த் துறைகளாம். அவற்றில் முழுகிக் காமவேள் கோட்டத்தை வணங்கிய பெண்கள் இம்மையில் கணவரோடு இன்புற்று வாழ்வர் ; மறுமையிலும் தேவருலகிற் பிறந்து இன்பம் துய்ப்பர் " என்ருள். கண்ணகி இவ்வுரையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆயினும் இங்குத் தேவந்தி கண் ணகியைத் தன் மனதார நேசித்து, அவளுக்கு நன்மை பயப்பதெனத் தனக்குத் தோன்றிய கருத்தை எடுத் துக் கூறியதை நாம் உன்னிப்பார்த்தல் வேண்டும்.

பிறகு கண்ணகி, காவிரிப்பூம் பட்டினத்தை விட்டகன்று கணவனுடன் மதுரையை யடைந்து, அங்குப் பாண்டியனுல் தன் கணவன் அநியாயமாய்க் கொல்லப்பட்டதனுல், அந்நகரை யழித்துச் சேர நாடு

சென்று, அங்குக் கணவனோடு தெய்வவிமான மேறித் துறக்கம் புகுந்து தெய்வமாயினாள். அக்கற்புத் தெய் வத்திற்குச் சேரன் செங்குட்டுவன் கோயி லெடுத் தான். இச்செய்தியை அறிந்த தேவந்தி விரைந்து வஞ்சிமாநகரை அடைந்து, கண்ணகி கோட்டத்தைச் சார்ந்தாள். அப்போது அக்கோயிலில் செங்குட்டு வனும் மற்றும் பலபேரும் கூடி யிருந்தனர்.

கோட்டமடைந்து கண்ணகிப் படிமத்தின் முன் நின்ற தேவந்தி துக்கந் தாங்காமல், "நற்றவம் செய்யாத நான் நீ அன்று கூறிய தீக்கனாவைக் கேட்ட போது ஒன்றும் தெளியாதவளாயிருந்தேன்; நீ மதுரையை எரித்ததையும் அங்கிருந்து சென்றதையும் அறிந்த அந்த நாளில் நின் அன்னையும் நின் மாமியும் உயிர்நீத்ததை நீ கேட்டாயோ தோழீ!" என்று புலம்பியழுதாள். பின்பு கண்ணகியை அடைக்கலப் பொருளாகக் கொண்ட மாதரியின் மகள் ஐயையைக் காட்டி, "கவுந்தி யடிகளால் அடைக்கலப் பொரு ளாகக் கொடுக்கப் பெற்ற உன்னைக் காக்கும் வகையறி யாது கெட்டேன் என்று கூறி உன் அழிவைக் கேட்டலும் தானும் அழிந்துபட்ட மாதரியின் மகளாகிய இந்த ஐயை, அவளில்லாததால் மண முடிக்கப் பெறாமல் நிற்பதைக் கண்டாயோ தோழீ! மாமியாகிய அம்மாதரியின் மகளை இதோகாண்!" என்று அரற்றினாள்.

இறுதியில் கண்ணகி, தன் தெய்வ வுருவைக் காட்டி யாவரையும் மகிழ்வித்து மறைந்தபின் செங் குட்டுவன் கண்ணகி கோயிலில் அக்கற்புத் தெய்வத் துக்குப் பூசனை புரிந்து கொண்டிருக்குமாறு தேவந் திக்குக் கூற, அவளும் அவ்வாறே இருந்துவந்தாள்.

## அரும்பதவுரை

திறம் - (இங்கு) மேன்மை; மாற்ருள் - கணவனது மற்ருெரு மனைவி; உலகம் - இங்கு உலகத்து மக்கள்; குறையிரத்தல் - தனக்கு நேர்ந்த துன்பத்தைக் கூறி அதனை நீக்க வேண்டுமென்று மன்ருடிக் கேட்டுக் கொள்ளுதல்; பலதேவன் - கிருஷ்ணனது தமையனுன பலராமன்; சாத்தன் - ஐயனுர் என்னும் தெய்வம்; இவர் சிவனுக்கும், மோகினி வடிவமெடுத்த திருமாலுக்கும் பிறந்த புத்திரன் என்று சொல்லப் பெறுவார்: அதனுல் ஹரிஹரபுத்திரன் என்னும் ஓர் பெயரும் இவருக்கு உண்டு; வாசவன் - இந்திரன்; வச்சிரம் - இந்திரனது வச்சிராயுதம்; கோட்டம் - கோயில்; இடாகினிப்பேய் - பெண் பேய்களில் ஒருவகை; அநுதாபம் - இரக்கம்; காமவேள் - மன்மதன்; துறக்கம் - சுவர்க்கம், தேவருலகு; பூசனை - பூசை.

## விஞக்கள்

1. மாலதிக்கு உற்ற துன்பம் யாது? அது நீங்கிய விதம் யாது?

2. தேவந்தி கண்ணகியைத் தேற்றிய விதம் யாது?

3. தேவந்தி கண்ணகி கோயிலுக்குச் சென்று அங்குக் கூறியது யாது?

4. தேவந்தியின் நட்புக்குணத்தை விளக்க ஒரு உதாரணங் கொடுக்க.

## பயிற்சி

1. மாலதியின் வரலாற்றை ஒரு கட்டுரையாக வரைக.

2. எதிர்ப்பதம் கூறுக: துன்பம், எழுவில்லை, இல்லை, மிகுந்த, அறியாதவள், இம்மை.

3. பின் கண்ட வாக்கியங்களைக் குறித்தபடி மாற்றுக.

(1) அதனுல் இரக்கங் கொண்ட சாத்தன், இறந்த குழந்தையைத் தான் தர இயலாதென்றும், அதற்குப் பதிலாகத் தானே ஓர் குழந்தையாக வருவதாகவும், தன்னைக் கொண்டு செல்லுமாறும், அதனுல் அவளது துன்பம் நீங்குமென்றும் கூறினுன்.—இவ்வாக்கி

யத்தைச் சாத்தன் நேரில் மாலதியை நோக்கிக் கூறியதுபோல் மாற்றிக் கூறுக.

(2) நீ கணவனுல் வெறுக்கப்படவில்லை.—இதில் கணவனுல் என்பதைக் கணவன் என மாற்றிக் கருத்து மாறுபடாதவாறு இவ்வாக்கியத்தை அமைக்க.

## இலக்கணம்

### வினைமுற்று

முடிந்த கருத்தைக் குறிப்பனவாய் வரும் வினைகள் வினை முற்றுக்கள் எனப்படும்.

(உ - ம்.) வந்தான், படிக்கிருன், இருப்பான்.

வினைமுற்றுக்கள் திணை, பால், எண், இடம், காலம் ஆகிய வற்றைத் தெரிவிக்கும்.

(உ - ம்.) படித்தோம் - இது உயர்திணை, பலர்பால், பன்மை எண், தன்மை இடம், இறந்தகாலம் ஆகியவற்றைக் குறித்தது.

படிக்கின்றீர்கள் - இது உயர்திணை, பலர்பால், பன்மை எண், முன்னிலை இடம், நிகழ்காலம் ஆகியவற்றைக் குறித்தது.

செய்யும் - இது அஃறிணை, ஒன்றன்பால், ஒருமையெண், படக்கை இடம், எதிர்காலம் இவற்றைக் குறித்தது.

# 6. சட்டமும் நியாயமும்

உலகில் நியாயத்தை நிலைநிறுத்தவே சட்டங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் இந்தச் சட்டங்கள் சில சமயங்களில் நியாயத்திற்கு மாறுபட்டவைகளாக ஏற்பட்டுவிடுகின்றன. இது எவ்வாறு என்னும் ஐயம் ஏற்படலாம். இதனைக் குறிக்க இங்கு ஒரு வரலாறு கூறுவோம்.

**புத்தர்** காடு சென்று ஞானம் பெறுவதற்கு முன் **சித்தார்த்தன்** என்னும் பெயருடன் நாட்டில் பெற்றோர்களோடு வசித்து வந்தார். அக்காலத்தில் அவரது உறவினராகிய **தேவதத்தன்** என்னும் பெயருடைய ஒருவர் அவரது அரண்மனைக்கு வந்திருந்தார். ஒரு நாள் அவர் அரண்மனை மேன்மாடத்தில் உல்லாசமாயிருந்தபோது ஆகாயத்தில் சில அன்னப் பறவைகள் பறந்து செல்வதைக் கண்டார். உடனே அவர் தம் வில்லை வளைத்து அவற்றுள் ஓர் பறவையைக் குறி வைத்து ஓர் அம்பு எய்தார். அந்த அம்பு அந்தப் பறவையின் இறக்கையில் பட்டு அதை ஒடித்துவிடவே அது பறக்க மாட்டாமல் கீழே விழத் தொடங்கியது.

அந்த மேன்மாடத்தை அடுத்து அரண்மனைப் பூங்கா இருந்தது. அங்கோர் இடத்தில் சித்தார்த்தர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவாறு உட்கார்ந்திருந்தார். அம்பு பட்டு வானத்தினின்று கீழே விழ முற்பட்ட பறவை அவரது மடியில் வந்து விழுந்தது. உடனே சிந்தனையிலிருந்து விடுபட்ட அவர் பறவைக்குற்ற துன்பத்தை அறிந்து "ஐயோ பாவம்! யாரோ பாவிகள் இதன்மீது அம்பெய்து இதன் இறக்கையை ஒடித்திருக்கிறார்கள். இதன் துன்பத்தைப் போக்கி இதைக்



சித்தார்த்தர் பறவையிடம் அன்பு காட்டுதல்

காப்பாற்றுதல் எனது கடமையாகும்'' என்று தமக்குள் எண்ணினார். அவ்வாறே அதன் இறக்கையில் ஏற்பட்டிருந்த காயத்திற்கு மருந்து வைத்துக் கட்டி அதைத் தடவிக் கொடுத்து அதன் துன்பத்தைப் போக்கியவாறு இருந்தார்.

அப்போது தேவதத்தரால் அனுப்பப்பட்ட ஒரு பணியாளன் அவரையடைந்து, "இந்தப் பறவை எனது எஜமானரால் அம்பெய்து வீழ்த்தப்பட்டது. ஆதலால் இது அவருக்குச் சொந்தமாகும். இதை வாங்கி வருமாறு அவர் எனக்குக் கட்டளை யிட்டார்'' என்றான். சித்தார்த்தர், "இதைத் தர இயலாது என்று நான் கூறியதாக உன் எஜமானரிடம் போய்ச் சொல்'' என்றார்.

வேலையாள் திரும்பிச் சென்று அச்செய்தியைத் தேவதத்தருக்கறிவிக்க, அவர் சினங்கொண்டவராய் சித்தார்த்தரை அடைந்து, "ஏ, சித்தார்த்தா! அன்னத்தைக் கொடுக்கிறாயா, இல்லையா?'' என்றார்.

"நீ இதன் துன்பத்தைப் போக்கி இதைக் காப்பாற்றுவதாக வாக்களித்தால் இதை உன்னிடம் கொடுக்கிறேன்! இல்லாவிட்டால் இயலாது!''

"நான் அதைக் காப்பாற்றுவதோ, கொல்வதோ, அது என் விருப்பம்! சட்டப்படி அது எனக்குச் சொந்தமானது! அதைத் தருகிறாயா? இல்லையா?''

"அதைக் கொடுக்க இயலாது! நீ அறங்கூற வையத்தை அடைந்து உன் வழக்கை எடுத்துச் சொல்லி அவர்கள் வாயிலாக இதைப் பெற்றுக் கொள்?''

"நல்லது அப்படியே செய்கிறேன்'' என்று கூறி தேவதத்தர் புறப்பட்டுச் சென்று அறங்கூற வையத்தாரிடம் முறையிட்டார். அவர்கள் சித்தார்த்தரை

வரவழைத்து வழக்கு விசாரணை செய்யலாயினர். அவைத் தலைவர் சித்தார்த்தரை நோக்கி, " நீர் சட்டப் படி இவருக்குச் சொந்தமான பறவையை ஏன் இவருக்குக் கொடுக்க மறுக்கிறீர் ?" என்றார்.

"சட்டத்தினும் உயர்ந்ததாகிய நியாயத்தைக் கருதியே மறுக்கிறேன் ?"

" அதென்ன நியாயம் ?"

"தேவதத்தர் இப்பறவையின் மீது தாம் அம்பெய்து வீழ்த்தியதால் இது தமக்குச் சொந்தமானது என்று சட்டம் பேசுகிறார். இப்பறவையை இவரிடம் கொடுத்தால் இவர் இதைக் கொன்றுவிடுவார். இதைக் கொல்ல இவருக்கு உரிமை ஏது ! அந்த நியாயப் படியே இதைக் கொடுக்க மறுக்கிறேன்."

"பறவை மிருகம் முதலியன வேட்டையாடி வீழ்த்தியவருக்கே சொந்தம் எனச் சட்டம் இருப்ப தால் நீர் இதை இவரிடம் கொடுத்துவிட வேண்டியது தான் !"

" இந்தச் சட்டம் மனிதனால் தன் நலத்தை உன்னித் தானாக ஏற்படுத்திக் கொண்டதுதானே ! இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களைக் கொல்ல உரிமையேது ?"

" நீர் சொல்வது நியாயமாக இருக்கலாம் ! இப்படி ஏதாவது ஒரு காரணம் கற்பித்துச் சட்டத்தை யெல் லாம் மீறுவதாயிருந்தால் நாட்டில் குழப்பம் ஏற்பட்டு விடுமன்றோ ?"

" அநியாயமாகக் காரணம் கற்பித்துச் சட் டத்தை மீறினால் குழப்பம் ஏற்படும். நியாயத்தின் படி நடந்தால் அது சட்ட விரோதமாக இருந்தாலும் குழப்பம் ஏற்படாது? மற்றும் நியாயமாக நடந்தது குறித்து உயர்ந்தோர் மகிழ்வர் !"

"பறவை மிருகம் இவற்றை வேட்டையாடுவது அரச தருமம்! அதை அநியாயம் என்று சொல்வது சரியல்ல! பறவையைத் தேவதத்தரிடம் கொடுத்து விடும்!"

"இது அரச தருமமாக இருக்கலாம். அஹிம்ஸை தான் எல்லாவற்றிலும் உயர்ந்த தருமம். இறைவனுல் அருளப்பட்ட வேதமாகிய சட்டம் இதனை உறுதி யாகக் கூறுகின்றது. இறைவனுல் படைக்கப்பட்ட உயிர்களை மனிதன் கொல்லலாம் எனச் சட்டமியற்றி யதே தவறு! அத்தவற்றை நிலைநாட்ட அறங்கூற வையம் முற்படுவது அதனினும் பெருந்தவறு! இந்த அநியாயத்தைத் தடுக்க நான் என் உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறேன். இப்பறவையைத் தர இயலாது.

இச் சொல்லைக் கேட்ட அவைத் தலைவர், "ஐயோ நான் என்ன செய்வேன்! நானே சட்டப் படி நடக்க வேண்டியவனுக இருக்கிறேன். சித்தார்த் தர் சொல்வதோ நியாயமாகப்படுகிறது! தேவதத் தரோ பிடிவாதமாக இருக்கின்ருர்!" என்று தமக்குள் எண்ணி வருந்தினுர். அப்போது அந்த சபைக்கு ஒரு துறவி வந்தார். அவர் அவைத் தலைவரை நோக்கி, "ஐயா அவைத் தலைவரே, இங்கு நிகழ்ந்த வற்றை யெல்லாம் நான் கவனித்தேன்! சித்தார்த் தர் சொல்வதுதான் நியாயம்! சட்டம் காலத்துக்குக் காலம், நாட்டுக்கு நாடு மாறுபட்டு நிற்பது. நியா யமோ எப்போதும் எவ்விடத்தும் மாறுபடாதது. அது இறைவனுல் இயற்றப்பட்ட சட்டம் - மனிதனுல் இயற்றப்பட்ட சட்டத்தினும், இறைவனுல் இயற்றப் பட்ட சட்டம் மேலானதன்ருே? ஆதலால் அச்சட்டப் படி பறவை சித்தார்த்தருக்கே உரியது! அவ்வாறே

தீர்ப்பளிப்பீர்! நீர் செய்வதறியாது மயங்கினமை யால்' உமது மயக்கத்தைப் போக்கவே நான் இங்கு வந்து இதைக் கூறினேன். சென்று வருகிறேன்!'' என்று கூறி அவ்விடம் விட்டு அகன்றார்.

அவருடைய மொழிகளைக் கேட்டு யாவரும் சற்று நேரம் திகைத்துப் பேசாமலிருந்தனர். பிறகு நியாயம் கூறிய பெரியார் யாவரென அறிய எண்ணி அவரைத் தேடலாயினர். அப்போது அங்கொரு மூலையில் நாகமொன்று வேகமாகச் சென்று மறைந் தது. அறங்கூறவையத்தாருள் ஒரு பெரியார் அதனை யாவருக்கும் காட்டி, ''மாந்தர் அறத்தின் நுட்பம் தெரியாது துன்புறுங் காலங்களில் அறக்கடவுள் இங்ஙனம் மனிதருருவில் வந்து அறத்தை வற்புறுத் திச் செல்வதுண்டு, எனப் பெரியார் கூறக் கேட்டிருக் கின்றேன். இதை இன்றே கண்கூடாகக் கண்டேன். இதோ அக்கடவுள் பாம்புருவம் எடுத்து மறைந்து விட்டது. இச்சட்டத்தினும் உயர்ந்ததாகிய நியாயத் தைக் கடைப் பிடித்தலே நமது கடமையாகும்!'' என்றார்.

இதைக் கேட்ட யாவரும், ''இதுவே நியாயம்! இதுவே செய்யத்தக்கது'' என்றனர். தேவதத்தரும் ''சித்தார்த்தா, இன்றே நான் உண்மை யறிந்தேன்! நான் உன்னை வற்புறுத்தித் தொந்தரை கொடுத்ததை மனத்தில் வையாது என்னை மன்னித்துவிடு'' என்றார்.

### அரும்பதவுரை

பூங்கா - பூந்தோட்டம்; சிந்தனை - ஆலோசனை; எண் ணம்; பணியாளன் - வேலையாள்; அறங்கூறவையம் - நியாயசபை; அவை - சபை; வீழ்த்தியவர்கள் - கீழே விழச்

செய்தவர்கள்; உன்னி - நினைத்து; (இங்கு) உத்தேசித்து; உரிமை - சொந்தம்; அஹிம்ஸை - துன்பம் செய்யாமலிருத் தல்; அகன்ருர் - நீங்கினர்; கண்கூடாக - கண்ணுக்குத் தெரியுமாறு; பிரத்தியட்சமாக-நிதர்சனமாக; கடைப்பிடித் தல் - அநுசரித்தல்; வையாது - வைக்காமல்.

## வினக்கள்

1. தேவதத்தருக்கும் சித்தார்த்தருக்குமிடையில் ஏற்பட்ட வழக்கு யாது?

2. தேவதத்தர் சட்டத்தை வற்புறுத்தியது எப்படி?

3. சித்தார்த்தர் நியாயத்தை வற்புறுத்தியது எவ்வாறு?

4. அறங்கூறவையத்தார் தீர்ப்புக் கூற இயலாமல் மயங்கியது ஏன்?

5. துறவி என்ன நியாயங் கூறினர்?

6. வழக்கின் முடிவு யாதாயிற்று? இவ்வரலாற்ருல் அறிவது என்ன?

## பயிற்சி

**பின் வரும் வாக்கியங்களைக் கேட்டுள்ள விதமாக மாற்றி யமைக்க:**

(1) ஒரு நாள் அவர் அரண்மனை மேன் மாடத்தில் உல்லாசமாயிருந்தபோது, ஆகாயத்தில் சில அன்னப் பறவைகள் பறந்து செல்வதைக் கண்டார்.—இவ்வாக்கியத்தை மூன்று சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுதுக.

(2) அந்த மேன் மாடத்தை யடுத்து அரண்மனைப் பூங்கா இருந்தது. அங்கோர் இடத்தில் சித்தார்த்தர் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவாறு உட்கார்ந்திருந்தார்.—இந்த இரண்டு வாக்கியங்களையும் ஒன்று சேர்த்து ஒரே வாக்கியமாக எழுதுக.

(3) இதைக் கொல்ல இவருக்கு உரிமை ஏது?—கருத்து மாருமல் இந்த வின வாக்கியத்தைச் சாதாரண வாக்கியமாக மாற்றி எழுதுக.

## இலக்கணம்

### பெயரெச்சம்

பெயரெச்சங்களும் காலங்காட்டும். பெயரெச்ச விகுதிகள் அ, உம் என்பன. இவற்றுள் அ என்பது இறந்த காலம், நிகழ் காலம் இரண்டையும் காட்டும்; உம் என்பது எதிர் காலத்தைக் காட்டும்.

(உ - ம்.) நடந்த, படித்த (பையன்)—அ. விகுதி இறந்த காலம் காட்டிற்று.


நடக்கிற, படிக்கின்ற (சிறுவன்)—அ. விகுதி நிகழ்காலம் காட்டிற்று.

நடக்கும், வரும் (குதிரை)—உம். விகுதி எதிர் காலம் காட்டிற்று.

இதனல் பெயரெச்சம், இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம் என மூவகைப்படுதல் அறிக.

# 7. தாயுமானவர்

சோழ வளநாட்டிலே வேதாரணியம் என்னும் திருப்பதியில் சைவ வேளாளர் மரபில் கேடிலியப்ப பிள்ளை என்ற ஒரு பெரியார் இருந்தார். இவரது மனைவியார் கஜவல்லியம்மையார் என்பவராவர். இவ்விருவரும் செய்த அருந்தவப் பயனாக உலகில்



தாயுமானவர்

வந்து அவதரித்தவரே தாயுமானவர் என்னும் பெரியார். இவருக்குச் சிவசிதம்பரம்பிள்ளை என்று ஒரு தமையனார் உண்டு.

கேடிலியப்பபிள்ளை கல்வி, கேள்வி, ஒழுக்கம்

இவற்றால் சிறந்து விளங்கினார். அது கண்ட சைவ ஆதீனத்தார் இவரைத் திருமறைக்காட்டுக் கோயில் மேற்பார்வையாளராக நியமித்தனர். அத் திருப் பணியை இவர் முறை தவறாது நடாத்திவருங் காலத் தில் திருசிராப்பள்ளியில் அக்காலத்தில் ஆண்டு கொண்டிருந்த முத்துக்கிருஷ்ண நாயக்கர் என் னும் அரசர் கடலாடுதற் பொருட்டு வேதாரணியத்தை அடைந்தனர்.

அவரது வரவையறிந்த கேடிலியப்ப பிள்ளை அவரை நன்கு வரவேற்று உபசரித்துச் சுவாமி தரிசனம் செய்வித்தனர். அப்போது பிள்ளையவர் களது நற்குண நன்னடக்கைகளைக் கண்ட அரசர் எண்ணறிவிலும் சிறந்து விளங்குவதைக் கவனித் தார். உடனே அவருக்குத் திருச்சியிலுள்ள தமது அரசாங்கத்தில் பெரிய சம்பிரதி என்னும் பெருங் கணக்கர் பதவியை அளித்தார்.

இங்ஙனம் கேடிலியப்ப பிள்ளை திருசிராப் பள்ளியில் சிறக்க வாழ்ந்த காலத்திற்றான் தாயு மானவர் அவருக்குப் புத்திரராக வந்து பிறந்தார். அவர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமு மாக வளர்ந்து ஓர் கணக்காயரிடம் உரிய காலத்தில் கல்வி கற்கலானார். மிக்க நுண்ணறிவு படைத்த அவர் விரைவில் பல நூல்களைக் கற்றுக் கல்வியில் வல்லவரானார். இயற்கையிலேயே சமய சம்பந்தமான ஆராய்ச்சிகளில் மிக்க ஈடுபாடு உடையவராயிருந்த மையால் அவற்றிற்குரிய வேதாந்த சித்தாந்த நூல் களில் சிறந்த தேர்ச்சி பெற்றார். மற்றும் இளமை முதலே பூசை, செபம், தியானம் இவற்றையும் அனுசரித்து வரலானார்.

இங்ஙனமிருக்கையில் கேடிலியப்ப பிள்ளை இப்

பூவுலக வாழ்வை நீத்தார். அப்போது விசயரங்க சொக்கநாத நாயக்கர் திருச்சியில் அரசராயிருந் தார். அவர் தாயுமானவரது அறிவியல் திறமை யையும் குண நலன்களேயும் கண்டு அவரது தந்தை யார் ஆற்றிவந்த பணியை அவருக்களித்துப் பெரு மைப்படுத்தினர்.

தாயுமானவர் இங்ஙனம் உலக வாழ்வில் ஈடுபட் டிருந்தாராயினும் அவர் மனம் உலகப் பற்றை நீக்கி முத்தியின்பத்தையே நாடுவதாயிற்று. இவரது பக்குவ நிலைக்கேற்ப, அக்காலத்தில் சிராப்பள்ளியில் சாரமா முனிவர் மடாலயத்தில் பதினேழாவது பீடத்தில் அமர்ந்திருந்த மௌனகுரு சுவாமிகளது அருள் நோக்கும் இவருக்குக் கிட்டியது.

தாயுமானவர் மௌனகுரு சுவாமிகளது சீட ரானுர். அவர் தாயுமானவரை நோக்கி, "நீர் சில காலம் உலக வாழ்க்கையில் ஈடுபட்டு மணம் புரிந்து கொண்டு ஒரு புத்திரனைப் பெற்ற பிறகு எம்மிடம் வருக! அப்போது உமக்கு ஞானுேபதேசம் செய் வோம்" என்றுர். அக்காலத்தில் இவர் யோக நிட்டை களில் சிறந்து புதுமைகளே விளைவித்தமையால் நாயக்க அரசர் இவரைத் தமது விருப்பம்போல் உத்தியோகக் கட்டுப்பாட்டினின்று விலகியிருக்கலாம் என்று கூறினுர்.

அதுகேட்ட தாயுமானவர் மகிழ்ந்து தல யாத் திரை செய்ய முற்பட்டு, விராலிமலையை அடைந்து அங்கிருந்த சித்தர்களுடன் சிலநாள் அளவளாவியிருந் தார். பின்னர்ப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு இராமேச்சுரத்தை யடைந்தார். இறுதியில் தமது சொந்த ஊராகிய வேதாரணியத்தை அடைந்தார். அங்கே தமது குருவின் கட்டளைக் கிணங்க மட்டு

வார்குழலி என்னும் கற்பரசியை மணந்து இல்லறம் இனிது நடாத்திக் **கனக சபாபதி** என்னும் மகனைப் பெற்ருர். பிறகு தம் குடும்பத்தைத் தமது தமையனர்பால் ஒப்படைத்துவிட்டுத் துறவியாகி திருசிராப்பள்ளியிலிருந்த மௌனகுருவை யடைந்து ஞானேபதேசம் பெற்ருர்.

பிறகு இரண்டாம் முறையாகத் தாயுமானுர் தல யாத்திரை செய்யத் தொடங்கிப் பல தலங்கட்கும் சென்று முடிவில் இராமநாதபுரத்தை அடைந்தார்.

இராமநாதபுரத்திற்குக் கிழக்கே சிறிது தூரத்தில் **காட்டூரணி** என்னும் ஓர் குளம் உண்டு. அதற்கருகில் ஒரு பெரிய புளிய மரம் இருந்தது. இராமநாதபுரத்தில் தங்கிய தாயுமானவர் ஒருநாள் அவ்விடத்தைக் கண்டு அதுவே தாம் இருந்து நிட்டை புரிவதற்கு ஏற்ற இடம் என அதனைத் தேர்ந்தெடுத்து அவ்வாறே நிட்டையும் புரிந்துவருவாராயினர். அவ்விடம் இப்போது **இலட்சுமிபுரம்** என வழங்குகிறது.

தாயுமானவருக்கு அவரது சிறிய தாயார் மகனுகிய **அருளையர்** என்பவரும், **கோடிக்கரை ஞானியார்** என்னும் மற்ருெருவரும் சீடர்களாயமைந்திருந்தனர். காட்டூரணியில் தாயுமானவர் இருந்த காலத்தில் அவர்களுக்கு அவர் ஞானேபதேசம் செய்தார். பிறகு சில காலம் சென்றபின் இறைவனேடு இரண்டறக் கலந்தனர். அவரது சமாதியிடத்தில் அவர் முத்தியடைந்த காலத்தைக் குறித்து கி. பி. 1661 ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ஆம் நாள் தாயுமானவர் முத்தியடைந்த காலம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

சுவாமிகள் திருச்சியில் சம்பிரதி உத்தியோகத்தில் இருந்த காலம் முதல், வேதாந்த சம்பந்தமாகப் பல

பதிகங்கள் பாடிவந்தனர். மௌனகுரு வணக்கம், திருவருள் விலாசப் பரசிவ வணக்கம், பரிபூர ணாநந்தம், பராபரக் கண்ணி, பைங்கிளிக் கண்ணி, எந்நாட் கண்ணி என்பன அவற்றுட் சிலவாம்.

சுவாமிகள் அருளிய பாடல்கள் எல்லாம் ஒரு தொகுதியாக ஆக்கப்பட்டுத் தாயுமானவர் பாடல் என்னும் பெயரால் அத்தொகுதி வழங்கி வருகிறது. அப்பாடல்களின் தொகை 1453 ஆகும். அவை சிறந்த கருத்துக்கள் அடங்கியவை. எளிமையும் இனிமையும் கொண்ட நடையமைந்தவை. சாமானிய மக்கள், புலவர், துறவத்தில் நிற்போர் முதலிய யாவருக்கும் ஒருங்கே இன்பமும் நலமும் பயப்பவை.

## அரும்பதவுரை

அருந்தவப்பயன் - அருமையான தவம் செய்ததால் உண் டான பயன்; ஆதீனத்தார் - மடத்தார்; திருமறைக்காடு; வேதாரணியம்; கடலாடுதல் - கடலில் நீராடுதல்; எண் ணறிவு - கணித அறவு; மேனி - உடலின் தோற்றம்; வண் ணம் - விதம்; சமயம் - மதம்; நீத்தார் - விட்டுவிட்டார் - ஆற்றிவந்த - செய்துவந்த; முத்தி - மோக்ஷம், பிறப்பு இறப்பு இவற்றினின்று விடுபடுதல்; பீடம் - இங்குப் பரம்பரை; யோக நிட்டை - கடவுள் தியானம்; தல யாத்திரை - புண் ணிய ஸ்தலங்கள் பலவற்றிற்குப் போய்வருதல்; இறைவனோடு இரண்டறக் கலந்தனர் - மோக்ஷமடைந்தார்; தொகுதி - சேர்க்கை.

## வினாக்கள்

1. கேடிலியப்ப பிள்ளைக்குச் சம்பிரதி உத்தியோகம் எப்ப டிக் கிடைத்தது?

2. தாயுமானவரது குரு யார்? அவர் எப்போது தாயு மானவருக்கு ஞானோபதேசம் செய்வதாகச் சொன்னார்?

3. தாயுமானவர் எவ்விடத்தைத் தாம் நிட்டை புரிவதற் குரிய இடமாகத் தேர்ந்தெடுத்தார்?

4. சுவாமிகள் செய்த நூலைப்பற்றி அறிவதென்ன?

## பயிற்சி

1. வாக்கியங்களில் அமைக்க :—நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக, நீத்தார், தொகுதி.

2. சமயம்—இதற்கு இரு பொருள் கூறி அவ்விரு பொருளும் தோன்றுமாறு வாக்கியத்தில் அமைக்க.

3. தாயுமானவர் வரலாற்றைச் சுருக்கி $1\frac{1}{2}$ பக்கத்தில் உங்கள் சொந்த நடையில் ஒரு கட்டுரை வரைக.

4. பின் கண்ட வாக்கியங்களைப் பின்னர்க் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றியமைக்க :

(1) இங்ஙனமிருக்கையில் கேடிலியப்ப பிள்ளை இப்பூவுலக வாழ்வை நீத்தார்.—இதில் "பூவுலக வாழ்வை நீத்தார்" என்பதை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக வேறு சொற்றொடரைக் கருத்து மாறாமல் அமைத்து இவ்வாக்கியத்தை முடிக்க.

(2) தாயுமானவர் மௌனகுரு சுவாமிகளது சீடரானார்—இதில் சீடரானார் என்பதை எடுத்துவிட்டுக் "குருவானார்" என்பதை வைத்துக் கருத்து மாறாமல் வாக்கியத்தை முடித்துக் காட்டுக.

## இலக்கணம்

### வினையெச்சம்

பெயரெச்சத்திற் போலவே வினையெச்சத்திலும் இறந்த கால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என மூன்று வகை உண்டு. வினையெச்ச விகுதிகள் அக்காலங்களைக் காட்டும். உ, இ, ய் என்பன இறந்த காலங் காட்டும் வினையெச்ச விகுதிகளாம்.

| | | |
|---|---|---|
| செய்து (முடித்தான்) | — | உ - விகுதி |
| ஓடி (வந்தான்) | — | இ - விகுதி |
| போய்(ச்சேர்ந்தான்) | — | ய் - விகுதி |

அ - என்பது நிகழ்கால வினையெச்ச விகுதி.

(உ - ம்.) வர (இருந்தான்)
கொடுக்க (எண்ணினான் } அ - விகுதி.

இன், ஆல், கால் ஆகியவை எதிர்கால வினையெச்ச விகுதிகளாம்.

| | | |
|---|---|---|
| (உ - ம்.) செய்யின் (முடியும்) | — | இன் - விகுதி |
| வந்தால் (கிடைக்கும்) | — | ஆல் - விகுதி |
| கண்டக்கால் (தெரிவிப்பாய்) | — | கால் - விகுதி |

## 8. பூம்புகார்

**பூம்புகார்** என்பது சோழர் தலைநகராய்ப் பண்டைக் காலத்தில் காவிரி நதி கடலோடு கலக்கு மிடத்தில் இருந்த ஒரு நகரம். தற்காலத்தில் அந்நகர் இருந்தவிடம் கடலால் கொள்ளப்பட்டு நகரிருந்த குறியே தெரியாத நிலையில் உள்ளது. **காவேரிப் பட்டணம்** என்னும் பெயரில் சிற்றூர் ஒன்று முன் புகார் இருந்தவிடத்திற்கருகில் உள்ளது. இதற்குச் **சம்பாபதி, காவிரிப்பூம்பட்டினம், காகந்தி** என வேறு பல பெயர்களும் உண்டு.

பண்டைக் காலத்தில் இந்நகரம் மிகச் சிறப்புற்று விளங்கியது. மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னும் இரு காப்பியங்களிலும் கூறப்படும் வரலாறுகள் இந் நகரத்தில் நிகழ்ந்தனவாம். இந்நகரைப்பற்றி யறி வதால் நம் தமிழரது பண்டை நாகரிகம் நன்கறியப் படும். ஆகையால் இந்நகரைப் பற்றிய செய்திகளை ஈண்டுக் கூறுவோம்.

இந்நகரம் மிகப் பழைமையானது. உலகில் மனி தர் தோன்றிய காலத்திலேயே இதுவும் தோன்றியது என்று மணிமேகலை கூறுகிறது. உலகில் மொத்தம் ஒன்பது தீவுகள் உண்டென்றும், நமது நாடு அத்தீவு களில் ஒன்றான சம்புத்தீவில் உள்ளது என்றும் ஒரு கருத்து நமது நாட்டில் நீண்ட நாளாக ஏற்பட்டிருக் கிறது. அந்தச் சம்புத் தீவின் காவல் தெய்வமாகிய **சம்பு** என்பது இந்நகரில் வந்து தங்கினமையால் இந் நகருக்குச் **சம்பாபதி** என்பது பெயராயிற்று.

மிகப் பழையகாலத்தில் சம்பாபதிக்கருகில் காவிரி நதி ஓடவில்லை. அகத்திய முனிவர் வடநாட்டினின்று தென்னாட்டிற்கு வந்தபோது, அவர் கொணர்ந்திருந்த

கரகநீரை, இந்திரன் காக்கையுருவில் தோன்றிக் கவிழ்த்து விட்டான். அந்நீர் காவிரியாருகப் பெருகி யோடி சம்பாபதியருகு சென்று'பின் கடலில் கலந்தது. அப்போது காவிரி நதி ஒரு பெண் வடிவங்கொண்டு சம்பாபதி தெய்வத்தை வணங்கி நிற்க, அத்தெய்வம், "இதுவரை என் பெயரால் வழங்கிய இவ்வூர், இனி உன் பெயரால் வழங்குவதாக" என்றது. அதனுல் **காவிரிப்பூம்பட்டினம்** என்பது இந்நகர்க்குப் பெயராயிற்று. ஒருகால் **ககந்தன்** என்னும் ஓரரசன் இவ்வூரை யாண்டுவந்த காரணத்தால் இதற்குக் **காகந்தி** என்றும் பெயர் ஏற்பட்டது. இந்நகரத்துள் பகைவர் புகார் ஆனமையாலும், இந்நகரத்தவர் தமக்கு ஒன்று வேண்டும் என்னும் காரணத்தால் பிற நாட்டுள் புகார் ஆனமையாலும் இதற்குப் **புகார்** எனப் பெயர் அமைந்தது என்று கூறுவர். பூம்புகார் என்பது இந்நகர்க்குச் சிலப்பதிகார ஆசிரியர் இட்ட பெயராகும். புகார் நகரின் சிறப்பைக் குறித்து இவ்வாசிரியர், "இந்நகர் சோழர் குலத்தோடு ஓங்கிப் பரந்து ஒழுகுவது. இந்நகரில் உயர்ந்தோர் இருப்பதால் கல்வியில் வல்ல பெரியோர் இந்நகரம் அசையாது நெடுங்காலம் நிலைத்து நிற்பதாக என்று கூறுவார்களேயன்றி இதற்கு ஒடுக்கம் கூறமாட்டார்கள்" என்று கூறியுள்ளார்.

இந்நகரம் **மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம்** என இரு பிரிவுகளாக அமைந்திருந்தது. மருவூர்ப் பாக்கம் கடற்கரையை அடுத்த இடமாம். இங்குப் பலவகைத் தானியங்கள், முத்து, பவளம், சந்தனம், பட்டு முதலிய பலவகைப் பொருள்களும் விற்கப்படும் கடைவீதிகளும், தச்சர், கொல்லர், சாலியர், பரதவர் முதலியோர் வசிக்கும் தெருக்களும் அமைந்திருந்தன.

கடற்கரையோரத்தில் **கலங்கரை விளக்கம்** ஒன்று அமைந்திருந்தது. இங்கமைந்திருந்த துறைமுகத்தில் சாவகம், சீனம் முதலிய கடல் கடந்த நாடுகளினின்று கர்ப்பூரம், பனிநீர், குங்குமம் முதலிய பல அரிய பொருள்கள் வந்தன. இங்ஙனம் வந்திறங்கும் பொருள்களையும், இங்கிருந்து ஏற்றுமதி செய்யும் பொருள்களையும் வைப்பதற்குப் பெரிய சரக்கறைகள் இங்குண்டு. இச்சரக்குகளுக்கு முத்திரையிட்டுத் தீர்வை விதிக்கும் ஆயத்துறைகளும், வாணிபத்தின் பொருட்டு வெளி நாட்டாராகிய சீனர், சோனகர், யவனர் முதலியோர் தங்குதற்குரிய இடங்களும் இங்கு இருந்தன.

பட்டினப்பாக்கம், கடற்கரைக்குச் சிறிது தூரத் திற்கப்பால் அமைந்திருந்தது. அதன் நடுவில் அரசன் அரண்மனையும், அதனைச் சுற்றி அந்தணர், வணிகர், உழவர், அமைச்சர், சேனாதிபதியர், மருத்துவர், காலக் கணிதர் முதலியோர் வாழும் வீதிகளும் அமைந்திருந் தன. அவ்வீதிகளுக்கப்பால் இசைக் கருவியாளர், நாடகக் கணிகையர் முதலியோர் வசிக்கும் மறுகுகள் அமைந்திருந்தன. ஆங்காங்கு அறச்சாலைகள், வேள்விச்சாலைகள், கோயில்கள், பூங்காவனங்கள், வாவிகள் முதலியன விளங்கி யிருந்தன.

இவ்விரு பாக்கங்களுக்குமிடையில் பலவகை மரங்கள் வரிசை வரிசையாயமைந்திருக்கும் பெரிய வெளியிடம் உண்டு. இங்கு **நாளங்காடி** என்னும் பெயரையுடைய ஒரு பெரிய சந்தை தினமும் கூடும். **நாளங்காடிப்பூதம்** என்னும் ஓர் தெய்வம் இதைக் காவல் செய்தது.

இந்நகரில் **வெள்ளிடை** மன்றம், இலஞ்சி மன்றம் நெடுங்கல் மன்றம், பூதசதுக்கம், பாவை

600 008 57324

மன்றம், என ஐந்து பொதுச்சபை யிடங்கள் இருந்தன. எந்திர வாவியையுடைய இலவந்திகை, உய்யானம், சம்பாபதிவனம், கவேரவனம், உவவனம் என்னும் பூஞ்சோலைகள் இந்நகரை அழகுபடுத்தின. உவவனத்தையடுத்துச் சக்கர வாளக்கோட்டம் என்றோரிடம் உண்டு. அங்குப் பௌத்தத் துறவிகள் வசித்து வந்தனர். சிவன், திருமால், இந்திரன், பல தேவன், குமரன், இந்திரனது வச்சிராயுதம், சாத்தன் ஆகிய தெய்வங்களுக்கு இங்குக் கோயில்கள் அமைந் திருந்தன. காவிரி கடலோடு கலக்குமிடத்தில் சோம குண்டம், சூரிய குண்டம் என்னும் புண்ணிய வாவிகளும், அவற்றையடுத்துக் காமவேள் கோட்ட மும் அமைந்திருந்தன.

இந்நகரில் பற்பல சமயத்தவரும் பற்பல நாட்டவ ரும் கூடி இன்புற்று வாழ்ந்துவந்தனர். ஆண்டு தோறும் இந்திரவிழா என்னுமொரு பெருவிழா இருபத்தெட்டு நாட்களுக்கு நடந்துவந்தது. அக் காலை ஊர் முழுவதும் சிறப்பாக அலங்கரிக்கப்படும். ஆங்காங்கு ஆடல்பாடல்களும், பலவகைக் களியாட் டங்களும், நூலாராய்ச்சிகளும் நிகழும். சமய குரவர் சமயசம்பந்தமான பேருரைகளை நிகழ்த்தி மக்களுக்கு உபதேசம் செய்வார்கள். விழா முடிவில் நகரமாந்தர் அனைவரும் கடலாடிக் கடற்கரையில் உல்லாசமாய்க் காலங்கழித்து மகிழ்வர்.

மேற்கூறிய இந்திர விழாவை எக்காரணத்தா லேனும் அவ்வூரவர் செய்யத் தவறினால் அந்நகர் அழிந்துவிடும் என்றோர் கொள்கை யிருந்துவந்தது. மணிமேகலை காரணமாக அரச குமாரனாகிய உதய குமரன் என்பவன் விஞ்சையன் ஒருவனால் கொல்லப் பட்டான். அதனால் உண்டான துக்கம் காரணமாக

அவ்வாண்டு அவ்வூரில் இந்திர விழா நிகழாமற் போகவே அந்நகரம் கடலால் கொள்ளப்பட்டது எனத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.

## அரும்பதவுரை

பூம்புகார் - பூ + புகார் - அழகிய புகார் நகரம்; கரகம் - முனிவர் கையில் வைத்துக்கொண்டிருக்கும் தண்ணீர்ப் பாத்திரம்; ஓங்கி - உயர்ந்து; ஒடுக்கம் - அழிவு; கலங்கரை விளக்கம் - இரவில் கடலில் செல்லும் கப்பல்களுக்குத் துறை முகம் உள்ள இடத்தைத் தெரிவிக்கும் விளக்கு; மறுகு - வீதி; கோட்டம் - கோயில்; நாளங்காடி - நாள் + அங்காடி - பகலில் கூடும் சந்தை; மன்றம் - வழக்கு விசாரணை முதலியன நிகழும் பொதுவிடம்; வாவி - குளம்; சமயகுரவர் - மத குருக்கள்; விஞ்சையன் - வித்தியாதரன் என்னும் தேவ சாதியான்.

## வினாக்கள்

1. புகார் நகருக்கு அமைந்த பெயர்களையும், பெயர்க் காரணங்களையும் கூறுக.
2. பட்டினப்பாக்கத்தைப்பற்றி நீ அறிவது என்ன?
3. மருவூர்ப்பாக்கத்தைப்பற்றி நீ அறிவது என்ன?
4. புகார் நகரிலுள்ள மன்றங்கள், பூந்தோட்டங்கள், வாவிகள் இவற்றைக் குறிப்பிடுக.
5. புகார் நகரம் அழியக் காரணம் என்ன?

## பயிற்சி

1. பின்வரும் பதங்களைப் பிரிக்க: சிற்றூர், வடநாடு, தென்னாடு, சரக்கரை, ஆயத்துறை.

2. பின் வருவனவற்றைச் சேர்க்க: வடிவம் + கொண்டு; புகார் + ஆனமையால்; முத்திரை + இட்டு; பூ + சோலை; பெரிய + சந்தை.

3. காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த இந்திர விழாவைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

4. ஒரு பொருட் சொற்களைக் கூறுக : வீதி, குளம், கோயில்.

5. வாக்கியங்களில் அமைக்க : கரகம், கலங்கரை விளக்கம், கோட்டம், சமயகுரவர், விஞ்ஞையன்.

## இலக்கணம்

### எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்துவரும். அவ்விதம் வருவது தோன்ரு எழுவாய் எனப்படும்.

(உ - ம்.) நடந்தாள் - இந்தச் செயலை ஒரு பெண் செய்த தாக ஏற்படுவதனுல் இதற்கு அவள் என்பது எழுவாயாகும். இந்த எழுவாய் தோன்ரு எழுவாய் ஆதலைக் காண்க.

வினைச்சொற்களேயன்றிப் பெயர்ச்சொற்களும் தமிழ்மொழி யில் பயனிலையாக வரும். இவை பெயர்ப் பயனிலை எனப் படும்.

(உ - ம்.) அவன் நல்லன் - இங்கு நல்லன் என்னும் பெயர் பயனிலையாக வந்தது. அது ஒரு பசு - இங்குப் பசு என்னும் பெயர்ச்சொல், பயனிலையாக வந்தது.

அவன் யார் - இங்கு யார் என்னும் பெயர் பயனிலையாக வந்தது. இது வினுப்பெயர் ஆகையால் இதை வினுப்பயனிலை என்றும் சொல்வார்கள்.

செயப்படுபொருளில் சில சமயம் ஐ உருபு மறைந்து வரும்.

(உ - ம்.) அவன் காற்ருடி வாங்கினன். இங்குக் காற்ருடியை என வரவேண்டியது, ஐ உருபு மறைந்து காற்ருடி என வந்தது.

# 9. செய்யுட் பாடங்கள்

## I. வாழ்த்து

### 1. கடவுள் வாழ்த்து

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென்(று) அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே ! (1)

—மாணிக்கவாசகர்

### 2. தமிழ்த்தாய் வணக்கம்

தென்றல் விளையாடுந் தென்மதுரைச் சங்கத்தில்
தொன்றுமுதல் வளர்ந்த தமிழ்த்தாயே—என்றுமுனை
அன்புடனே போற்றி யருங்கவியாம் அணிபுனையும்
இன்பப் பணியெனக்குத் தா.

—வித்வான் V. மாணிக்கம்

#### அரும்பதவுரை

வான் - ஆகாயம் ; மண் - பூமி ; வளி - காற்று ; ஊன் - உடல் ; உண்மை - உள்ள பொருள் ; இன்மை - இல்லாத பொருள் ; கோன் - தலைவன் ; கூத்தாட்டுவான் - கூத்தாடச் செய்பவன் ; நின்றாயை - நின்ற உன்னை ; தொன்று - பழைய காலம் ; அணி - ஆபரணம் ; புனை - அணிவிக்கும் ; பணி - தொண்டு.

# II. நீதி

## 1. நன்னெறி

கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர் ;—அம்மா !
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. (1)

தக்கார்க்கே யீவர் ; தகார்க்களிப்பார் இல்லென்று
மிக்காருக் குதவார் விழுமியோர் ;—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய் ? (2)

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்ருகும் ;
அல்லார் செயுங்கேண்மை யாகாதே ;—நல்லாய்கேள் ;
காய்முற்றின் தின்தீங் கனியாம் ; இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னுகிப் போம் ? (3)

## 2. நீதிநெறி விளக்கம்

முற்றும் உணர்ந்தவர் இல்லை : முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க ;—சிற்றுளியால்
கல்லும் தகரும் ; தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னுல். (1)

நல்லா ருெழுக்கின் தலைநின்ருர் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் ;—பல்பொறிய
செங்கட் புலியேறு அறப்பசித்தும் தின்னுதாம்
பைங்கட் புனத்தபைங் கூழ். (2)

## 3. நாலடியார்

எற்றென்றும் இல்லா விடத்தும் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க்(கு) அசைவிடத்(து) ஊற்றுவர்;
அற்றக் கடைத்தும் அகல்யா(று) அகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும். (1)

கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி ;—தோட்ட
கயப்பூப் போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரும் இல். (2)

## 4. பழமொழி

உணற்கினிய இன்னீர் பிறிதுழியில் லென்றும்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார் ;—கணக்கினை
முற்றப் பகலும் முனியா(து) இனிதுஓதிக்
கற்றலின் கேட்டலே நன்று. (1)

புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும் ;—நலமிக்க
பூம்புன லூர ! பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின் கால். (2)

பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்துவிடுதல்—பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர ! அதுவன்றே
நாய்மேல் தவிசிடும் ஆறு. (3)

### அரும்பதவுரை

#### நன்னெறி

(1) கைம்மாறு - பதிலுதவி ; உகவாமல் - விரும்பாமல் ; இயல் உதவி - இயன்ற உதவி ; எயிறு - பல் ; முதிர்சுவை - நிறைந்த சுவை ; எயிறு வலியனதாம்மென்று சுவை விளக்கும் எனக் கூட்டுக.

(2) இல் என்று - இல்லை என்று ; மிக்கார் - நல்லொழுக்கத்தை மீறிச் சென்ற தீயோர் ; முளி - உயர்ந்த.

(3) கேண்மை - நட்பு ; அல்லார் - நல்லவரல்லாதவர் ; தின் தீங்கனி - தின்னத்தக்க இனிய பழம் ; நாள் போய் - நாட்கள் பல கழிந்து.

### நீதிநெறி விளக்கம்

1. கற்றனம் - நாங்கள் கற்றுவிட்டோம் ; களியற்க - மகிழ்ச்சியடைய வேண்டாம் ; தகரும் - உடையும் ; தகரா - உடையாது ; கனங்குழாய் - கனமான குழை என்னும் காதணியை அணிந்த பெண்ணே ; கொல்லுலைக்கூடம் - கொல்லனது உலைக் களத்திலுள்ள சம்மட்டி.

2. நல்லாறு - நல்லவழி ; ஒழுக்கு - ஒழுக்கம் ; தலைநின்றார் - அதனிடத்து நின்றவர் ; நல்கூர்ந்தும் - வறுமை யடைந்தும் ; அல்லன - நல்லவை யல்லாதன ; ஒருப்படார் - மனம் ஒப்பார் : அற - மிகவும் ; புனத்த - வயலிலுள்ள ; பைங்கூழ் - பசிய பயிர்.

### நாலடியார்

1. எற்று ஒன்றும் - எத்தன்மையானது ஒன்றும் ; அற்று - ஒன்றுமில்லாமற் போய், அதாவது, வறுமை யடைந்து ; அசைவிடத்து - துன்பமடைந்த விடத்து, ஊற்றுவர் - ஊன்றுகோலாவர் ; அகழ்ந்தக்கால் - தோண்டினால் ; தெற்றென - தெளிவாக.

2. கோட்டுப்பூ - நிலத்தில் மரத்தின்மேல் பூக்கும் பூ ; கூம்புதல் - மூடிக் கொள்ளல் ; வேட்டதே வேட்டது ஆம் - விரும்பியவாறே விரும்புவதாம் ; கயப்பூ - குளத்திலுள்ள தாமரை முதலிய பூக்கள் ; முன் மலர்ந்து பின் கூம்புவார் - முதலில் சிநேகித்துப் பின் விரோதங் கொள்பவர் ; நயப்பார் - விரும்புவார் ; நட்பார் - சினேகிப்பவர்.

### பழமொழி

1. இன் நீர் - இனிமையான நீர் ; பிறிதுழி - வேறு இடத்தில் ; கணக்கினை - இலக்கண இலக்கியங்களை ; முனியாது - கோபியாமல் ; கற்றலின் - கற்பதைக் காட்டிலும்.

2. புலம் மிக்கவர் - கல்வியறிவு மிகுந்தவர் ; பூம்புனல் ஊர - அழகிய நீர்வளம் மிக்க ஊர்கட்கு அரசனே ; ஆகாது - (இங்குப்) புலப்படாது.

3. பேணி - விரும்பி ; பொறிவண்டு - புள்ளிகளை உடைய வண்டு ; இசைமுரலும் - பாட்டைப் பாடுகின்ற, அதாவது, ரீங்காரம் செய்கின்ற ; தவிசு இடும் ஆறு - உட்காருதற்குரிய சேணத்தை இடும் விதமாம்.

# III. கதை

## பஞ்ச தந்திரம்

### ஒரு பிரமசாரியின் கதை

உரைத்த அக் கதையே தென்ன,
ஓதுமோர் நகரந் தன்னில்
தரித்திரப் பிரமசாரி
சார்ந்தொரு சிராத்தத் துண்டான் ;
அரைத்திடும் பொரிமாத் தோண்டி
யவற்கொரு மறையோ னீந்தான் ;
திருத்தியிற் பருப்புஞ் சோறும்
தின்றதோர் மயக்கத் தாலே, (1)

மற்றொரு நகர்க்குச் செல்லும்
வழியிலோர் மணற்ற டத்தில்
சற்றொரு கணப்போ தங்கே
தரித்தவன் அருந்து நெஞ்சில்
உற்றகா ரியங்கள் கோடி
யுன்னினன் : இந்த மாவை
விற்றுநா மாடு வாங்கி
மேய்க்கிலோர் இரண்டு குட்டி, (2)

போடும் ;அவ் விரண்டில் ஒன்றும்
பொருகடாத் தன்னை விற்று
நாடுபெண் ஆடி ரண்டு
நயவிலை யாகக் கொள்வோம் ;
ஆடொரு நாலாம் ; அந்த
ஆடுகள் இரண்டி ரண்டாப்
போடுமக் குட்டி யோடே
பொருந்திய பனிரண் டாமே. (3)

பன்னிரண் டாடும் விற்றுப்
பசுக்க ளோர் இரண்டு கொள்வோம் ;
தன்னிலே பட்டி மேய்ந்து
தருக்கியே இரண்டு ஈனும் ;
மன்னுபால் நெய்யும் விற்று
மற்றிரு பசுவுங் கொள்வோம் ;
அன்னவப் பசுக்கள் ஆறும்
ஆறுசேங் கன்று நல்கும். (4)

மூவணை யேருங் கூட்டி
முன்னுள நிலங்கள் எல்லாம்
ஓவற வளங்க ளாக
உழுது நாம் பயிர்கள் இட்டே
மேவுதா னியங்கள் எல்லாம்
விலைகளைக் குறைய விற்றுக்
காவலன் அறிக்கை யாலே
கக்கவோர் வீடுங் கட்டி, (5)

இருந்துநாம் பணமும் காசும்
ஏரொடு பொருளும் தேடிப்
பொருந்திய பிராம ணர்க்குப்
போசனம் இடுவோம் ; இட்டால்
வருந்தியே நமக்குப் பெண்ணும்
வலியவே தருவார் ; அந்தத்
திருந்திழை யாள்வ யிற்றில்
சனிப்பனோர் சிறந்த மைந்தன். (6)

அப்படி யிருக்கு நாளில்
அந்தியிற் பசுக்கள் கட்டக்
கொப்படர் கண்ணுள் செல்லக்
குழந்தையும் அழும்;நா மோடி

இப்படி யடிப்போம் அங்கே
என்றொரு தடியெ டுத்துச்
செப்பிய பொரிமாத் தோண்டி
சிதறிட வடித்திட் டானே. (7)

கலங்கினன் பிரம சாரி
காரகஸ் தங்க ளெல்லாம்
துலங்கிய பொரிமா வைத்த
தோண்டியோ டழிந்த தன்றே
மலங்குகண் ணீர்கள் சோர
வயிற்றினில் அடித்துக்கொண்டே
நிலத்தினிற் புரண்டு வீழ்ந்து
நெடுந்துயர் அடைந்தான் அன்றே. (8)

—வீரமார்த்தாண்டதேவர்

## அரும்பதவுரை

1. பிரமசாரி - கலியாணமாகாதவன்; சிராத்தம் - இறந்தவர்க்காக ஆண்டுதோறும் இறந்த நாளில் செய்யும் ஓர் சடங்கு; திருத்தியில் - திருப்தியாக, போதுமென்னும் அளவிற்கு. (2) மணற்றடம் - மணல் + தடம் - மணலுள்ள விடம்; தரித்து - தங்கி; (3) பொருகடா - சண்டை போடும் ஆட்டுக்கடா; நயவிலை - குறைந்த விலை; (4) தன்னிலே பட்டி மேய்ந்து - தானகவே அங்கு மிங்கும் சென்று பட்டி மாடாக மேய்ந்து; பட்டி - கட்டப்படாமல் தானகவே மேய்ந்து திரியும் மாடு; ஈனும் - கன்று போடும்; சேங்கன்று - காளைக்கன்று; (5) மூவணை ஏர் - மூன்றுகச் சேரும் ஏர்; ஓவறு - ஓ + அறு - ஒழிவில்லாத; (6) வருந்தியே - (இங்குக்) கெஞ்சியே; திருந்திழையாள் - நன்ருகச் செய்யப்பட்ட ஆபரணங்களையுடையவள் (பிரமசாரியினது மனைவி); சனிப்பன்- பிறப்பான்; (7) அந்தி - மாலைப்போது; கொப்பு அடர் கண்ணுள்- காதளவு ஓடிய கண்ணுள் (பிரமசாரியின் மனைவி) (8) காரகஸ்தங்கள் - இல்லறத்தைக் குறித்து எண்ணிய எண்ணங்கள் - மனோராஜ்யங்கள்; மலங்கு கண்ணீர்கள் - கண்ணிலிருந்து துளிக்கும் கண்ணீர்கள்.

## IV. பிற வகை

### தலை யிடை கடை மாணுக்கர்

அன்னம் ஆவே மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணுக்கர். (1)

—நன்னூல்

### சகோதர அன்பு

செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே !—விஞ்சு[தனையும்
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார் ! (2)

—வரதுங்க ராமபாண்டியன் மனைவி

### ஆடையின் மகிமை

மேலாடையின்றிச் சபைபுகுந் தாலிந்த மேதினியோர்
நூலா யிரம்படித் தாலுமெண்ணுர் ; நுவல்பார் கடலோ
மாலா னவர் அணி பொன்னுடை கண்டு மகளைத்தந்தே
ஆலாலம்ஈந்தது தோலாடை சுற்றும் அரன் தனக்கே.

## அரும்பதவுரை

(1) நெய்யரி - நெய் வடிகட்டும் பன்னாடை; அன்னம் ஆவே - அன்னர் தலை மாணக்கர்; மண்ணொடு கிளியே - அன்னர் இடை மாணக்கர்; இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி - அன்னர் கடை மாணக்கர்.

(2) செஞ்சுடரோன் மைந்தன்-சூரியன் மகனான சுக்கிரீவன்; தென்னிலங்கை வேந்தன் - விபீஷணன்; பஞ்சவர் - பஞ்ச பாண்டவர்; பார்த்தன் - அர்ச்சுனன்; விஞ்சு விரதம் - அரிய விரதம்; மேதினியை - உலகத்தை.

3. எண்ணார் - கவனிக்கமாட்டார்கள்; மாலானவர் - மஹா விஷ்ணு; ஆலாலம் - கொடிய விஷம்; அரன் - சிவபெருமான்; பாற்கடல் மாலானவர் அணி பொன்னுடைகள் கண்டு அவருக்கு மகளை ஈந்தது; தோலாடை சுற்றும் அரனுக்கு ஆலாலம் ஈந்தது.

TB 23/6/61

173741

600 008.

RTR 114

# PUDUMAI TAMIL VACHAKAM

FOR

FORM I—SPECIAL STUDY

AUTHOR

VIDWAN V. MANICKAM

T. G. GOPAUL PILLAI

PUBLISHERS

TEPPAKULAM, TIRUCHIRAPALLI | 2/27, BROADWAY G. T. MADRAS

*Copyright*]

[*Price Re.* 0–10–0